Registered as a Newspaper


தரமானதே சிறந்தது என்றால்



★ சொலிட் ★
பம்பையே வாங்குங்கள்



# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-50



When only the best is Good enough



BUY
SOLIDE Pumps


சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு புரட்டாதி மீ 05 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹற்றம் பிறை 26 (21 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 255

## பருத்தித்துறை பொலீஸ் நிலையத்துக்கு
### இந்தியப் படை பாதுகாப்பு

வடமராட்சி, செப் 21

சில நாட்களுக்கு முன் பொதுமக்களினால் சேதமாக்கப்பட்ட பருத்தித்துறை பொலீஸ் நிலையம் நேற்றுக்காலை 8 மணி முதல் இந்திய இராணுவப் பாதுகாப்புடன் இயங்கத் தொடங்கியுள்ளது.

இங்கு வேலை செய்யத் தமிழ்ப் பொலீஸார் தயக்கம் காட்டுவதால் தமிழ் தெரிந்த இந்திய இராணுவத்தினரும் பொலீஸ் நிலையத்தில் சேவை செய்வதாக இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-1ூ0)

## யாழ் பொலீஸ்நிலையம் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், செப். 21

பொதுமக்களால் அண்மையில் சேதமாக்கப்பட்ட யாழ் பொலீஸ் நிலையம் மீண்டும் இன்று முதல் செயற்படவுள்ளது!

முன்னர் அமைக்கப்பட்ட பொலீஸ் விடுதியிலேயே இது இயங்கும் என்றும்—

இந்திய இராணுவத்தினர் பொலீஸ் நிலையத்துக்கு பாதுகாப்பு வழங்குவர் என்றும் அறிய வருகிறது. [உ-10]

## அமைதி வழிமூலமே ஆயுதங்கள் மீட்பு
### இந்திய அதிகாரி அறிவிப்பு

கொழும்பு, செப் 21

சமாதான வழிகள் மூலமே ஒப்படைக்கப்படாத ஆயுதங்களைப் போராளிகளிடமிருந்து பெற இந்திய அமைதிப் படை எண்ணியுள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி சப்டன் குப்தா இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆயுதங்களைஒப்படைப்பதற்கு காலக்கெடு ஒன்றும் இல்லை.

ஆயுதங்களைக் கொண்டு செல்பவர்கள் பற்றி பொலீஸார் தகவல் கொடுத்தால்இந்திய அமைதிப் படை அந்த ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளும்.

இந்தியஅமைதிப்படை மீது பலாத்காரம் பாவிக்கப்பட்டால் மட்டுமே திருப்பிப் பலாத்காரம் பாவிக்கப்படும்

தானாகச் சென்று இந்திய அமைதிப்படை போராளிகளிடமிருந்து ஆயுதங்களைப் பெ மாட்டாது.

இப்படி சப்டன் டி. சி. குப்தா சொன்னார். (உ-எ)

## கூட்டுரோந்து நடத்தும் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, செப் 21

இலங்கை இராணுவத்தினருடன் சேர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளை நடத்துவதற்கு இந்திய அரசு மறுத்துவிட்டது.

இதுசம்பந்தமாகப் புதுடில்லிக்கு விஜயம் செய்த போது இலங்கை ஆயுதப் படைகளின் கூட்டுத்தளபதி ஜெனரல் சிறிவர்த்தனதுங்கா இந்திய அரசுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்து இருந்தார்.

அந்த வேண்டுகோளையே இந்திய அரசு நிராகரித்து விட்டது.

கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தகவலை கொழும்பில் இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி சப்டன் டி. சி. குப்தா கொழும்புச் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

ரோந்து நடவடிக்கையின் போது இலங்கைப் பொலீசாரை மட்டுமே இந்திய அமைதிப்படையினர் தங்களுடன் ஈடுபடுத்துவர்-இப்படி கப்டன் குப்தா மேலும் சொன்னார். (உ-எ)

## சில வாகனங்கள் மீது பரந்தனில் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர் சென்ற சில தனியார் பஸ்கள், வாகனங்கள் பரந்தனில் வைத்து ஆயுதம் தாங்கியோரினால் தாக்கப்பட்டன.

நேற்றுக்காலை இச் சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற அரச பஸ் உட்பட பல தனியார் பஸ்கள் பரந்தனை அண்மித்தபொழுது ஆயுதம் தாங்கிய குழுவினர் பஸ்களை மறித்துச் சோதனையிட்டது.

இதனையடுத்து சில பயணிகளும் சாரதிகளும் தாக்கப்பட்டதுடன் வாகனங்களின் கண்ணாடிகளும் அடித்துநொருக்கப்பட்டன.

இதன் காரணமாக தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன. [உ-10]

## திருமலை ஊரடங்கு

கொழும்பு, செப் 21

திருகோணமலையில் நேற்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு உத்தரவு இன்று காலை 6 மணிவரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

அதுபோன்று இன்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்கு உத்தரவு நாளை காலை 6 மணி வரை அமுலில் இருக்கும். (உ)

# வடக்கு, கிழக்கில் மேலும் பல பொலிஸ் நிலையங்களைத் திறக்க இந்திய அமைதிப்படை உதவும்

## ஆயுதங்களைக் கைப்பற்றுவதை இலகுவாக்கும் என நம்பிக்கை

கொழும்பு, செப்டெம்பர் 21

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இதுவரை திறக்கப்பட்ட பொலீஸ் நிலையங்களை விட மேலும் பலவற்றைத் திறப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அவற்றைத் திறந்து செயற்பட வைப்பதற்கு இந்திய அமைதிப் படை உதவும் என அறியவருகிறது.

அதிக பொலீஸ் நிலையங்களைத் திறப்பதன் மூலம் போராளிகள் குழுக்களிடம் உள்ள மிகுதி ஆயுதங்களைக் கைப்பற்றுவது இலகுவாக இருக்கும் என அரசாங்கம் நம்புகிறதாம்.

ஒப்பந்தத்தின் பின்னர் திறக்கப்பட்ட பொலீஸ் நிலையங்களை மூடுமாறு கோரி வடக்கில் மக்கள் வழிமறிப்புப் போராட்டம்நடத்தி வருவதுதெரிந்ததே.

ஆனால் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் மேலும் பல பொலீஸ் நிலையங்களைத் திறப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)





என்ன, நிலைமை சரியாய் இறுகிக் கொண்டு வருமாப்போலை கிடக்குது. சஷ்ட காலம் தொடரும் எண்டு நினைக்க வேண்டியது தான்!

## குடாநாடு முழுவதிலும் அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப் 21

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி குடாநாட்டில் பெரியளவில் அடையாள உண்ணாவிரத நிகழ்சிகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையம், அண்ணா சனசமூக நிலையம், யாழ் சொட்டடிச் சந்தி, யாழ் அடைக்கல மாதா கோவில்முன்றல், குருநகர் சனசமூக நிலைய முன்றல், சஞ்சுவான் கோவில் முன்றல், திருநகர் பாரதி சனசமூக நிலைய முன்றல், சர்த்தர் ஆண்டவர் ஆலய முன்றல், அச்சுவேலி செல்வநாயகபுரம், கொக்குவில் பொற்பதி வீதி புனித சின்னப்பர் ஆலய முன்றல் ஆகிய இடங்களிலும்

வலவெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், நெல்லியடி, வல்லிபுரக் கோவில், துன்னாலை, கொம்மந்துறை, கெருடாவில், தொண்டமானாறு, நாவலர்மடம், சப்பூது அண்ணாசிலையடி, நவிண்டில்,வதிரி, உடுத்துறை, கைக்குளம் ஆழியவளை, நாகர்கோவில், தாளையடி, பருத்தித்துறை – மடத்துப்பிள்ளையார் கோவிலடி, சுப்பர்மடம் ஆகிய இடங்களி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனின் நிலை மிக அபாயம்!

யாழ்ப்பாணம், செப். 21

தொடர்ந்து ஆறுநாட்களாக நீராகாரப்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்துவரும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன் தற்போது அபாயகரமான கட்டத்தில் இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவரது உடல் நிலை தொடர்ந்து மோசமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது

நேற்றுக் காலை வரை அவரது உடல் நிலை ஓரளவு சீராக இருந்ததாயினும் மாலையில் நிலைமை மோசமடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடித்துடிப்பும் வெகுவாக மோசமடைந்து

( 6 ஆம் பக்சம் பார்க்க)

## இன்றும் மறியற்போர்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ் குடா நாட்டில் இன்றும் அரச செயலகம் உட்பட அனைத்து செயலகங்கள் முனபாகவும் மறியல் போராட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [உ-10]

### சுபநேரம்

21-09-1987
புரட்டாதி 05
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12 02முதல் 1.32வரை
ராகுகாலம்:-
7.32முதல் 9 02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கேதாரேஸ்வர விரதம்

## அரசியல் வாதியின் காதல் வாழ்க்கை
### ஜனாதிபதி ஆணைக்குழு முன்

கொழும்பு, செப். 21

ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவரின் 'காதல் வாழ்க்கை' பற்றி விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஆராய உள்ளது

சம்பந்தப்பட்ட பெண் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே ஆணைக்குழு விசாரணை நடத்த இருப்பதாக இரகசியப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதி தனது காதலிக்கு அரசாங்கச் சம்பளம் பெற்றுக் கொடுத்து வந்திருந்தார் என்பது புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அந்தப் பெண்ணுக்கு நன்கொடையாக குறிப்பிட்ட அரசியல் வாதியினால் வழங்கப் பட்டதாகக் கூறப்படும் காணியின் உறுதி, காணிப் பதிவுத் திணைக்களத்தில் இருந்து மறைந்து விட்டதாம்.

அதற்கும் அரசியல் வாதிக்கும் தொடர்புண்டா என்பதை அறிந்துகொள்ளும் விசாரணையை இரகசியப் பொலீசார் நடத்தி வருகின்றனர். (உ-எ)

## இன்றும் கடைகள் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ் நகரில் இன்றும் தனியார் கடைகள் மூடப்பட்டிருக்கும் எனவும்.

எனினும் வைத்திய சாலை, கூட்டுறவுக்கடைகள், திறக்கப்பட்டிருக்கும் எனவும், புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏனைய தனியார் கடைகள் மூடப்பட்டிருக்கும் அதேவேளை, தனியார் போக்குவரத்துகளும் மட்டுப்படுத்தப்படும்.

வெளியூர் பஸ் சேவைகளுக்கு எதுவித தடங்கலும் இருக்கமாட்டாது.

ரயில் சேவையும் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனை வாசுதேவா நேற்றுப் பார்த்தார்

யாழ்ப்பாணம், செப் 21

நவ சமசமாஜக் கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. வாசுதேவா நாணயக்காரா நேற்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் திலீபனைப்பார்வையிட்டார்.

கட்சியின் சில முக்கிய உறுப்பினர்களும் நேற்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் குற்றச்சாட்டை இந்தியா மறுக்கிறது!

புதுடில்லி, செப். 21

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இயக்க மோதல்களை இந்திய உளவுப்படை 'றோ' தூண்டிவிடுவதாகப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

அந்த அதிகாரி மேலும் கூறிய தாவது:-

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் நூற்றுக்கும் அதிகமான தமிழரும் மற்றவர்களும் உயிரிழந்தமை இந்திய அரசுக்கு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தூண்டுதலினால் நடத்தப்பட்டன.

இக்கொலைகள் இந்தியாவிலும், சர்வதேச சமூகத்திலும் அதிர்ச்சியையும் மனவேதனையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈஸ்வரதாஸ் காலமானார்

யாழ்ப்பாணம், செப் 21

உதயன் – சஞ்சீவி நிறுவனத்தின் ஊழியர்களில் ஒருவரான சபாபதி ஈஸ்வரதாஸ் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர் கடந்த ஒரு வருடகாலத்திற்கு மேலாக கணக்குப் பகுதியில் பணிபுரிந்தார். அதற்கு முதலில் அவர் அரசாங்க சேவையில் கடமையாற்றினார். ஆசக்கடைசியாக வவுனியா கச்சேரியில் பணிபுரிந்தார்.

பருத்தித்துறை ஹாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. என். டி. எல். எவ். வாகனம் மீது மறைந்திருந்து சூடு! இருவர்பலி!!

கிளிநொச்சி, செப். 21

சனிக்கிழமை மாலை பரந்தனில் வைத்து ஈ. என். டி. எல். எவ் வைச் சேர்ந்தோர் வந்த வான்மீது மறைந்திருந்த கோஷ்டி ஒன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் மரணமாகினர். வாகனம் சேதமாக்கப்பட்டது ஒருவர்காயமடைந்தார்.

தாக்குதல் நடத்தியோர் தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இறந்தவர்கள் ஈ என். டி. எல். எப். இயக்கத்தைச்சேர்ந்ததவம்,(மாதகல்) சாந்தன் (பரந்தன்) ஆகியோர் எனத்தெரிவிக்கப்படுகிறது

தவம் சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானார். சாந்தன் அநுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லுகையில் வவுனியாவில் மரணமானார்.

இவர்களது சடலங்கள் பின்னர் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டன.

### கிளிநொச்சியில் பதற்றம்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கிளிநொச்சியினூடாகச் செல்லும் சகல வாகனப் போக்குவரத்துக்களும் தடை செய்யப் பட்டுள்ளன.

ஈ. என். டி. எல். எப். அலுவலகத்தின் முன் வீதித்தடை போடப்பட்டுள்ளது.

வீதித்தடையை நீக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★
★மின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★

## தேவை

ஓட்டுவேலையும், கம்மாலை வேலையும் தெரிந்தவர்கள் தேவை. மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமானசம்பளம் வழங்கப்படும். உடனே நேரில் வரவும் பருத்தித்துறை பழைய D.R.O. பணிமனைக்கு அருகாமையில். (1693)

## வகுப்புகள்

G.C.E(O/L) டிசம்பர் ஆங்கில துரித மீட்டல், A/L,பல்கலைக்கழகமாணவர், தொழிலாளருக்கான எழுதப் பேச ஆங்கிலம், ஆசிரியர்-ஆசிரிய கலாசாலை மூன்னாள் ஆங்கில விரிவுரையாளர், கல்வித்திணைக்கள ஆங்கிலப் பரீட்சகர் கயிலாயநாதன் S.T.C.A, புதிய இல 594(410), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [1003]


# அம்பாறை மாவட்ட புனரமைப்பு வேலைகளில் அசமந்தப் போக்கு!

கல்முனை, செப். 21

''மட்டக்களப்பு மாவட்ட புனர்நிர்மாண நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் புனர்நிர்மாண நடவடிக்கைகளில் அம்பாறை மாவட்டக் கச்சேரி நிருவாகம் அசமந்தப் போக்காக இருந்து வருகிறது. இது வேதனைக்குரியவிடயமாகும்''

-அக்கரைப்பற்றுப் பிரசைகள் குழுவின் தலைவர் ஜனாப். ஏ. எம். அகமது லெவ்வை மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''அம்பாறை மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர் சிங்களவர்களாக இருப்பதுடன் கச்சேரி முழுமையாக பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கத்தில் இருக்கிறது.

இதுவே புனர்நிர்மாண வேலைகளில் அசமந்தம் காட்டுவதற்கு காரணம் என அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்கள் பல இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸித்றுக்கும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் முறையீடு செய்துள்ளன.

அம்பாறை மாவட்டத்துக்கு உடனடியாகத் தமிழ் பேசும் அரச அதிபரை அனுப்பவேண்டும் எனவும், அங்கு தமிழிலும் கருமங்கள் நடைபெறவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதுவிடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்கப்படாவிடில் இம்மாவட்ட தமிழ் பேசும் மக்கள் மேலும் மேலும் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும் - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-84)

## 21 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்படும்

### புனர்வாழ்வு நிதியம் ஏற்பாடு

மானிப்பாய். செப். 21

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மேலும் 21 குடும்பங்களுக்கு உதவி வழங்க யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக்குடன் இந்நிலையத்தினர் பாதிக்கப்பட்டவர்களை அழைத்து நேர்முக விசாரணைகள் செய்து வருகின்றனர்.

மீன்வலைகள். கடைகள் ஸ்தாபிக்க உதவி பாற்பண்ணை கோழிப்பண்ணை நிறுவுதல் மாட்டுவண்டி போன்ற புனர்வாழ்வுக்கான உதவிகளையும் அளிக்கவுள்ளனர்.

மேலும் இதே போல 22 பேர்களுக்கு புனர்வாழ்வுக்காக தையல் இயந்திரங்கள் வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் (ஓ-90)

## சிங்களப் பிரசுரம் கூறுவது என்ன?

கல்முனை, செப். 21

'அம்பாறை மாவட்டத்தில் உள்ள உகனை, மங்களஓயா, மகாஓயா ஆகிய பகுதிகளில் பயங்கரவாதிகளின் நடமாட்டம்குறையவுமில்லை, வன்செயல்கள் முடியவுமில்லை. சமாதானம் ஏற்பட்டும் அம்பாறை மாவட்டம் பயங்கரவாதிகளின் அட்டகாசங்களுக்கு இலக்காகி வருகின்றது'.

இவ்வாறு குறிப்பிடும் சிங்களத்தில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் அம்பாறை மாவட்டத்தில் விநியோகிக்கப் படுகின்றன.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்திய இராணுவத்தை வெளியேற்றி, ஸ்ரீலங்கா கமாண்டோக்களையும், பொலீஸாரையும் சேவையில் அமர்த்தவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

'சிங்கள சங்விதாயை' என்னும் அமைப்பு இந்தப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளது. (ஓ-84)


அந்தியேஷ்டி சபிண்டீகரண

## அழைப்பு



திரு. கு. வேதாரணியம்பிள்ளை

அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் 23-09-1987 அன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, ஊறணியில் கரைக்கப்படும். இந்த அழைப்பை ஏற்று சமுகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.

முகவரி: 'ஜெய பவனம்', அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

இங்ஙனம் மனைவி, வே. செல்வநாயகம் பிள்ளைகள், மருமக்கள்.


## நிவாரணப் பணம் நிறுத்தம்

மானிப்பாய், செப் 20

யாழ்ப்பாணம் அகதிகள் புனர் வாழ்வு நிதியத்தினல், இதுவரை காலமும் திருமலைக்குத் திரும்பிச் செல்லும் இடம்பெயர்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுவந்த நிவாரணப் பணம் பிரயாணச்செலவு ஆகியன தற்போது நிறுத்தப்பட்டுவிட்டன.

இந் நிவாரணத்தை பெறுவதற்காக இனிமேல் எமது நிலையத்துக்கு இடம் பெயர்ந்தவர்கள் வரவேண்டாம் என்றும், சம்பந்தப்பட்டவர்கள் தத்தம் பகுதி உதவி அரசாங்க அதிபரைச் சந்தித்த் வேண்டிய உதவிகளைது பெறுமாறும் யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிதிய பொருளாளா திரு. ஜே. எம். சபாரத்தினம் அறிவித்துள்ளார் (ஓ-90)

## கருத்தரங்கு

மானிப்பாய், செப் 21

1982 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரிய பயிற்சி கல்லூரிகளில் [பயிற்சி பெற்று] நூனசித்திய டைந்திருந்த ஆசிரியர்கள் தமது பயிற்சி நெறியை பூரணப்படுத்தும் வகையில் சுயமுயற்சிக்கற்றல் பயிற்சி இன்று திங்கள் முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறும்.

மகரகம ஆசிரிய பயிற்சி கல்லூரியில் இப்பயிற்சி நடைபெறும் என்றும், பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களுக்கான பிரவேசக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் ஆசிரிய பயிற்சிக் கிளை அறிவித்துள்ளது. (உ-90)

## மன்னருக்கு நீர் மின் விநியோகம்

கொழும்பு, செப் 21

மன்னருக்கு நீர் மின்சாரத் திட்டத்தின் கீழ் மின் விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை மின்சார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மதவாச்சியில் இருந்து மன்னருக்கு 33 ஆயிரம் வால்ட் உயர்சக்தி மின்சார விநியோகம் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு உலகவங்கி நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அனுமதி வழங்கி இருந்தது.

வன்செயல்கள் காரணமாக இதுவரை இத்திட்டம் அமுல் செய்யப்படாது இருந்தது.

20 லட்சம் ரூபா செலவில் மதவாச்சியில் இருந்து 83கிலோமீட்டர் தூரத்துக்கு உயர்மின் அழுத்த வயர்கள் பொருத்தப்பட வேண்டும்.

இத்திட்டம் 1989 நடுப்பகுதியில் பூர்த்தி அடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (உ-எ)

## ஈ.பி.ஆர்.எல். எவ்வின் உறுப்பினர்களே மண்டூரில் பலி!

மட்டக்களப்பு, செப். 21

மண்டூரில் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐவரும் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் என பொலீஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மண்டூர் கிராமத்தில் கொல்லப்பட்டவர்களில் மு. கணபதிப்பிள்ளை (60 வயது) என்ற வயோதிபரும் ஒருவராவர்.

த. ஜெகஜோதி (20 வயது) ரா. பாக்கியராஜா (30 வயது) இ. கிருஷ்ணபிள்ளை (30 வயது) வீ. கிருஷ்ணபிள்ளை (30 வயது) ஆகியோர் தான் ஏனைய நடர்களாவர். அனைவரும் மண்டூர் வாசிகளாவர்.

மகிழூரில் சுட்டுக் கொல்லப்பட்ட சி. கனகசுந்தரம் (25 வயது) என்பவரும் மேற்படி இயக்க உறுப்பினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை மேற்கொண்ட மாவட்ட நீதிபதி ஜனாப் எம். காரியப்பர் கொலைகள் எனத் தீர்ப்பு வழங்கினார். (அ-21)

## எம்.பிக்களின் பாதுகாப்பு: பொறுப்பை ஊர்காவல் படையினர் ஏற்பர்

கொழும்பு, செப். 21

எம். பிக்களுக்குப்பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை விரைவில் ஊர்காவல் படையினர் ஏற்பர்.

இதற்காக ஆயிரம் ஊர்காவல் படையினர் தெரிவு செய்யப்பட்டு இராணுவப்பயிற்சி வழங்கப்படுகின்றது.

எம். பிக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் பொறுப்பு தற்போது தேசியத் துணைப் படையினருக்கு வழங்கப்பட்டு உள்ளது

இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டபின்னர் ஊர்காவல் படையினர் தேசியத் துணைப்படையினரிடம் இருந்து பொறுப்பை ஏற்பர்.

இது ஒரு பெரிய வேலை-இப்படி பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

இப்போது எம்பிக்களுக்கு நான்கு முதல் ஆறு தேசியத் துணைப் படையினர் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

பெரும்பாலான தேசியத் துணைப்படையினர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளி யே பொலீஸ் நிலையங்களில் ஈடுபட்டுள்ளனர்.

## இரத்தத்தை சேமிக்கும் கொள்கலன்கள்

கொழும்பு, செப். 21

இரத்தத்தைப் முப்பத்தைந்து தினங்களுக்குச் சேமித்து வைக்கும் புதிய கொள்கலன்கள் ஆஸ்பத்திரிக்கு வழங்கப்படவுள்ளன.

இப்போதைய கொள்கலன்களில் இரத்தத்தை இருபத்தொரு தினங்களுக்கு மட்டுமே சேமித்து வைக்க முடிகின்றது

புதிய கொள்கலன்கள் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. (உ-எ)

## கூரை, நிலைகள் இன்றி ஆயிரம் மொட்டை வீடுகள்

திருகோணமலை, செப். 21

திருகோணமலையில் படுக்கை, பத்தாம் நம்பர் முதல் உப்புவெளி மூன்றும் கட்டை வரை தமிழர்களுக்குச் சொந்தமான சுமார் ஆயிரம் வீடுகள் ஓடு, கூரை, ஜன்னல்கள், கதவு நிலைகள், போன்றவை எதுவும் இன்றி எரிந்த சுவர்களோடு மொட்டையாகக் காட்சியளிக்கின்றன.

இந்த வீடுகள் அனைத்தும் தமிழர்களுக்குச் சொந்தமானவை.

இவ்வீடுகளுக்கு நடுவே அமைந்துள்ள சிங்களவர்களின் வீடுகள் எதுவித பாதிப்புமின்றிக் காணப் படுகின்றன.

ஆனால்இப்பகுதியில்இருந்த ஐந்து கோவில் களில் ஒன்று கூடத் தப்பவில்லை இக் கோவில்கள் கொள்ளையடிக்கப்பட்டு முற்றாகச் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இப்பகுதியில் சேதமுற்ற வீடுகளில் சிலவே வன்செயல்களின் போது தாக்கப்பட்டு எரிக்கப் பட்டன,

ஏனையவை, பீதியால் அப்பகுதித் தமிழர்கள் இடம்பெயர்ந்த பின்னர் கொள்ளையிடப் பட்டன.

கொள்ளையர்கள் வீட்டுச் சாமான்கள் மட்டுமல்லாமல் ஜன்னல், கதவுகள், அவற்றின் நிலைகள்உட்பட எல்லாப் பொருள்களையும் வண்டிகளில் ஏற்றிச் சென்றதாக இடம் பெயர்ந்த தமிழர்கள் தெரிவித்தனர்-

கடந்த மூன்று ஆண்டு காலத்தினுள் திருமலைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் அளவிட முடியாதென திருமலைத் தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## அடிக்கடி மின்சாரத் தடை

மானிப்பாய், செப்.21

நவாலிவடக்கு,மானிப்பாய் போன்ற இடங்களில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக இரவு வேளைகளில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது.

தொடர்ச்சியாக இரவு நேரத்தில் மின்சாரம் தடைப்படுவதனல் மக்கள் பெரும் கஷ்டமடைகின்றனர்.

இவ்விடயத்தை உடனடியாக கவனித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மானிப்பாய் பிரதேச மின்சார அத்தியட்சகரை பொது மக்கள் வேண்டியுள்ளனர். [உ-90]


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## ராஜீவின் தாளத்துக்கு ஆடுவதற்கு எம்மக்கள் தயாரில்லை என்கிறர் அனுரா

கொழும்பு, செப். 21

பிரதமர் ராஜீவ் காந்தியின் தாளத்துக்கு ஆட எமது மக்கள் தயாராக இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா இப்படிச் சொன்னார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை விளக்க சுதந்திரக் கட்சி மாத்தறையில் கூட்டம் ஒன்றை நடத்தியது.

அக்கூட்டத்தில் பேசிய போது திரு. பண்டாரநாயக்கா இக்கருத்தை வெளியிட்டார்.

### சிறிமாவோ

கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னதாவது;

இந்திய - இலங்கை ஒப்பந்தம் நாட்டுக்குச் சுதந்திரம் கொண்டுவந்துள்ளது என்று கூறுகின்றன.

இயக்கங்கள் தங்களுக்குள் மோதி பலரைக் கொலை செய்து வருகின்றார்கள்.

அமைதியாக இருந்த தென் இலங்கை, ஒப்பந்தம் வந்த பின்னர் அமைதி இழந்து கஷ்டப் படுகின்றது.

ஒப்பந்தம் கொண்டு வந்த சமாதானம் இது தானா?

உலகில் சிங்களவருக்கு உள்ள ஒரே ஒரு நாடு இலங்கை. தமிழர் இந்தியா செல்ல முடியும். சிங்களவர் எங்கே செல்வது?

பல கஷ்டங்களுக்கு மத்தியில் சிங்களச் சட்டத்தைக் காலஞ் சென்ற பண்டாரநாயக்கா கொண்டு வந்தார்.

இன்று தமிழ், ஆங்கிலம் - இரண்டும் அரச கரும மொழிகளாக்கப் படவுள்ளன.

இது தானா சிங்களமக்களுக்கு இந்த அரசு செய்யும் சேவை?

நாட்டில் வாழும் ஒவ்வொரு இனத்தின் விகிதாசாரத்துக்கு ஏற்றுப் போல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்காசொன்னர்.

## சேவைநலன் பாராட்டுவிழா

குருநகர், செப். 21

ஏழு வருடங்கள் நாவாந்துறைப் பங்குத் தந்தையாக சேவையாற்றிய வண-பிதா பி. எம். இம்மானுவல் அடிகளின் சேவை நலனைப் பாராட்டி இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் விழா ஒன்று நடைபெறும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் திரு. ஜீ. இராசரட்ணம் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறும். (உ-51)

## நியமனம்

பருத்தித்துறை, செப்.21

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவானாக கடமையாற்றிய திரு. எஸ். வரதராஜா பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிவானாக நியமிக்கப் பட்டுள்ளார். (சி-118)

## கல்முனைத் தொகுதியிலுள்ள தமிழ்க் கிராமத்திற்கு மின்சார வசதி

அம்பாறை, செப். 21

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த துரவந்திய மேடுப் பகுதிக்கு விரைவில் மின்சார வசதி கிடைக்கவிருக்கிறது.

இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக மின்சாரவசதியற்றிருப்பாதல் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பெருக்குகளின் போது இரவு வேளைகளில் பெரும் அவலங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இதையிட்டு கரைவாகு மேற்கு உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஜனாப் ஏ. ஏ. கபூர், தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதன் பயனாக துரவந்தியமேடு பகுதிக்கு மின் விஸ்தரிப்பு மேற் கொள்வதற்கென ஐந்துலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மின் அத்தியட்சகர் திரு. குமாரசாமியின் மேற்பார்வையில் குறித்த பகுதிக்கான மின் விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஜனாப். கபூர் தெரிவித்தார். (ஓ-14)

## திருடர் தொல்லை

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி பகுதிகளில் கள்வர் நடமாட்டம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நள்ளிரவு நேரத்தில் திருடர்கள் கூட்டமாகச் சந்திகளில் நிற்பதாகவும் இதனல் பொதுமக்கள் பெரிதும் பீதியடைந்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (உ-161)


## பிரயாண ஒழுங்கு

✯ சவூதி ✯ குவைத்

✶ வீட்டுப் பணிப்பெண்கள்
✶ கார்சாரதி ✶ கூலியாட்கள்

ஆகியவற்றுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

✶ அத்துடன் பாஸ்போட், பொண்ட், சர்வதேச வாகனலைசென்ஸ் ஆகியன குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

✯ சவூதி ✯ குவைத்

நாட்டிற்கு சாரதி, பணிப் பெண்கள், கூலியாட்களாக செல்ல விரும்புவோர் 25ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு:-

K. K. அம்பிகாபதி
கலைமணி வீதி, கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். (1002)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

## ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை - 1988

01. இப்பரீட்சை 31-10-1987 சனிக்கிழமை நடைபெறும்.

02. தற்போது ஆண்டு 5இல் கல்வி கற்கும் 01-02-1977ஆந் திகதிக்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர்களாவர்.

03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை, கட்டணமாக ரூபா பத்து (10/-) செலுத்திக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரில் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 10/-க்கான காசுக்கட்டளை/ அஞ்சற்கட்டளையையும், தமது சுய முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்படாத 9'' X 4'' அளவான கடிதவுறையினையும் அனுப்பி விண்ணப்பப் படிவங்களை தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

04. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபால்மூலம் 15-10-1987 புதன்கிழமைக்கு முன் அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும். 15 - 10 - 1987ஆந் திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

05. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப்படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரம் 24-10-1987க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பெற்றோர் / பாதுகாவலருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

ச. பொன்னம்பலம்
அதிபர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். 18-10-1987


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினையும் அவலமும்

## சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கே நன்கு விளங்கும்

## ராஜீவ் புரிந்து கொள்வது கஷ்டம்

செ. அழகரத்தினம்

வடக்கும், கிழக்கும் தமிழர் சரித்திர காலம் தொட்டு வாழ்ந்து வரும் பிரதேசம் என்பதை ஒப்புக் கொள்ளும் ஜே. ஆர் "அவர்கள் இது கால வரை ஏனைய இனப்பிரிவுகளுடன் வாழ்ந்து வந்துள்ளனர்" எனும் வசனத்தை ஒப்பந்தத்தில் சேர்க்க ராஜீவ்காந்தியை ஒப்புக்கொள்ளச் செய்த இராஜதந்திரத்தைப் புகழாமல் இருக்கமுடியாது.

இது 1981 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டில் சிங்கள மக்கள் வடக்கில் 1.00 கிழக்கில் 4.5 மட்டுமே இருந்தும் கூட இந்த வசன புகுத்தல் தொடர்ந்தும் இவ்விரு மாகாணங்களிலும் சிங்கள மக்களைக் குடியேற்றவே என்பது வெளிப்படை.

இந்த ஒப்பந்த 14 ஆம் பந்தியில், 4.5.86 தொடக்கம் 19.12.86 வரையான பேச்சுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யோசனைகளை இந்த யோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது ஒரு நிபந்தனை"

அதன்படி காணியும் பாரிய குடியேற்றத் திட்டங்களும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும். அத்துடன் பாரிய குடியேற்றங்கள் தேசிய இனவிகிதாசாரப் படியே அமுல் செய்யப்படும்.

'இந்தக் காணி பாரிய குடியேற்றக் கொள்கையை தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொண்டால் அடுத்த 25 ஆண்டினுள் யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த ஏனைய வடக்கு - கிழக்கு மாகாணப் பகுதிகளும் சிங்கள மக்கள் பெரும்பான்மைப் பிராந்தியங்களாக மாறுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

ஆறுகள் பாரிய குளங்கள் இல்லாத பிராந்தியங்களில் கூட ஆழ்குழாய்க் கிணறுகளை நிறுவி குடியேற்றத் திட்டங்களை மத்திய அரசு செய்யமுற்படின் யாரால் இதை தடுத்து நிறுத்த முடியும்!

ஒவ்வொரு பாரிய குடியேற்றத் திட்டத்திலும் குடியேற்றப்படும் சிங்கள இனத்தவர் மற்றைய ஏழு மாகாணங்களிலும் இருந்தே வருவர். ஆனால் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்த இரண்டு மாகாணங்களில் இருந்தே வருவர்.

இந்திய வம்சாவழியினர் இனக்கலவரம் இல்லையேல் மலைப்பிரதேசத்தை விட்டு வெளியேறமாட்டார்கள். பிற 7 மாகாணங்களிலும் தற்பொழுது வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் உத்தியோகத்தரும் வியாபாரிகளும் ஆசையால் வரவும் மாட்டார்கள். அத்துடன் குடியேறுவதற்கு தகுதியும் அற்றவர்கள் ஆவர்.

ஆகவே இந்த இரண்டு மாகாணங்களிலும் குடியேற்றப்படும் சிங்களக் குடியேற்றம் காரணமாக இவ்விரு மாகாணங்களிலும் சிங்கள மக்களின் விகிதாசாரம் உயர்ந்து கொண்டே போகும்

இந்த 4-5-86 — 19-12-86 யோசனைகளை அவ்வேளை இருந்த சூழ்நிலை - போர்நிலைமை காரணமாகப் புலிகள் கவனியாது விட்டிருக்கக் கூடும்; ஆனல் கூட்டணியினரோ இதில் ஒரு தடவைக்கு மேல் பங்கு பற்றி உள்ளனர். அப்படி இருந்தும் சென்னையில் இருந்து ஒப்பந்தத்தைப் பார்க்கும் பொழுது சுரும் புள்ளிகள் தென்படுவதைக் கண்டும்கூட புலிகள் தலைவரை டில்லிக்குக் கூப்பிட்டு அவர் ஒப்புதல் தரமாட்டார் என்பதை உணர்ந்து மற்றைய இயக்கங்களையும் கூட்டணியினரையும் டில்லிக்கு அழைத்தவுடன் மற்றைய இயக்கத்தினர் தான் ஒப்புதல் தந்தனர் எனினும் கூட்டணியினர் தங்கள் ஒப்புதலை இந்த ஒப்பந்தத்திற்குத் தந்தது ஏன் என்பது ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

பண்டா - செல்வா; டல்லி - செல்வா ஒப்பந்தங்களில் இந்த இன விகிதாசாரம் என்ற சொற்பிரயோகத்திற்கே இடம் இருக்கவில்லை. இது கூட்டணியினருக்கு எல்லோரிலும் பார்க்க நன்கு தெரியும்.

கூட்டணியினர் மட்டும் புலிகள் ஏற்றுக் கொள்ளாவிடின் தாங்களும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஒரு சொல் அன்று சொல்லியிருப்பார்களேயானல் ராஜீவ் காந்தி ஜே ஆரை இன விகிதாசார குடியேற்ற முறையை நீக்கும்படி வற்புறுத்தி அதில் வெற்றியும் கண்டிருப்பார்கள் என்பது நிச்சயம்.

கூட்டணியினர் இந்தத் தவறை நினைத்து வெட்கப்படுவதை விடுத்துப் பெருமைப்படுவதை நினைக்கும் பொழுது 'தமிழினமே நீ என்ன பாவந்தான் செய்தாயோ' என்று கதறுவதைவிட வேறொன்றும் தோன்றவில்லை.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ராஜீவ்காந்தி தான் மொழிவாரி பிரிவினையை எதிர்ப்பவன் என்று தாராளமாகச் சொல்ல முடியும். ஒரு சிறுபான்மை இனத்தவனுக்கே சிறுபான்மை இனத்தவன் படும் அல்லல்கள் அவஸ்தைகள் புரியும்,

மற்றும் ராஜீவ் காந்தி செல்லும் இடம் எல்லாம் இலங்கைத் தமிழர் தாங்கள் கேட்டதை விட கூடப் பெற்றுள்ளனர் என்று கூறுகிறார் ஏனே இவர் இலங்கைத் தமிழன் வேண்டி நின்றது "தமிழீழம்" என்பதை மறந்துவிட்டார்.

இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கு கிடைத்ததற்கரிய வரப்பிரசாதம் என ராஜீவ்காந்தி நம்பிக் கொண்டு இருக்கிறார், இவர் சிங்கள இனத்தவரின் சுழி ஓடும் திறமையை ஒரு நாளைக்குக் கட்டாயம் அறிவார்.

அப்பொழுது இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கில் ஒரு தமிழ்நாடு இருப்பதே இந்தியாவிற்கு வரப்பிரசாதம் என்பதை உணர்வார் உணர்ந்து அதை உருவாக்கவும் உதவுவார்; ★

## ஐ. நா. வில் த. ப. இயக்கம்

★ உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர் அந்தஸ்து இந்த ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் உலகளாவிய முறையில் பன்னாடுகளில் கிளைகளை அமைத்து தமிழ்க் கலாச்சார பண்பாட்டு நோக்கங்களுக்காகப் பாடுபட்டு வருவதாலும், மனித உரிமைகளைப் பாதுகாக்கப் பாடுபட்டுவரும் உலக அமைப்புக்களுடன்சேர்ந்து பணியாற்றி வருவதாலும், ஐ. நா. மன்றத்தின் அடிப்படை மனித உரிமைச் சாதனத்தை மதித்து ஏற்றுக்கொள்வதாலும் உலக நாடுகள் மன்றத்தில் இந்த இயக்கத்துக்குப் பார்வையாளர் தகுதியைப்பெற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது

இந்த ஆண்டின் பிற்பகுதியில் ஐ. நாவின் கூட்டம் நடைபெறும் போது நமது தலைவர்களான திரு இர ந. வீரப்பன் அவர்களும், மொறிசியசு மா தங்கணமுத்து அவர்களும் அமெரிக்கா சென்று பார்வையாளர்களாகக் கலந்து கொள்வார்கள்.

## வாசகர் திருமுகம்

### இவர்களுக்கு இன்னும் இரக்கம் வரவில்லையா?

இவ்வருடம் வைகாசி மாதம் 26 ஆம் திகதி வடமராட்சிப் பகுதியில் ஆரம்பித்த இராணுவக் கெடுபிடிகளால் பல நூற்றுக்கணக்கானோர் இறந்தார்கள். பல வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் உடைக்கப்பட்டுவிட்டன. இவையாவும் அவரவர் விதி என்ற கருத்தைச் சிலர் கொண்டுள்ளார்கள் போலும்.

மிக அண்மையில் ஓர் ஆலயத்தில் பெருந்தொகையான பணம் செலவழிக்கப்பட்டு திருவிழா நடந்ததும், எமது ஊரில் உள்ள ஒரு கோவிலில் புதியதாகத் திருப்பணி செய்ய ஆரம்பித்திருப்பதும் மனதிற்கு வேலை கொடுக்கிறது.

இவ்வேளையில் இவ்வாறன செயல்கள் நடப்பதைப் பார்க்கத் தமிழர்களாகிய நாம் பாவம் செய்த இனம் என்று எண்ணுகிறோம்.

பல இளம் பெண்கள் கணவனை இழந்து எமது சேவாச்சிரமத்தில் வந்து கண்ணீர் விடும்பொழுது மிகவும் வேதனையாக இருக்கிறது. இத் தருணத்தில் சுவாமி விவேகானந்தரின் அறை கூவலை செவிமடுப்பதுதான் ஒரே வழி எனத் தோன்றுகிறது.

"பசிப்பவனுக்கு சமயத்தைப் போதிக்காதே! வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களை சிவனாக காண்பவன் சிவபெருமானுக்குப் பக்கத்தில் இருக்கக் கடவன் இவர்களுக்குச் செய்யும் சேவையே உயர்ந்த சிவபூஜையாகிறது" என்கிறார்.

பலர் எம்முன்னால் இறந்ததையும் பார்த்து நமக்கு மனதில் இன்னும் இரக்கம் வரவில்லையானல், நாம் சைவர்கள் என்று சொல்வதில் ஓர் அர்த்தம் இல்லை. ஜீவசேவையே சிவபூஜை.

—சுவாமி சித்ரூபானந்தா
பருத்தித்துறை

### கோர்பச்சேவ் - றேகன் சந்திக்கும் வாய்ப்பு:

# ஐ.நா. சபையின் 42 ஆவது பொதுச்சபை உலக சரித்திரம் படைக்கப் போகிறது

ஐ. நா. பொதுச் சபையின் 42 ஆவது ஆண்டுக் கூட்டம் சென்ற 15 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பமானது.

நூற்றி ஐம்பத்தொன்பது நாடுகளின் தூதுக் குழுக்கள் இதில் கலந்து கொள்கின்றன-

பெரும்பாலான நாடுகளின் தூதுக்குழுக்களுக்குவெளியுறவுஅமைச்சர்கள் மற்றும் முக்கிய தலைவர்கள் தலைமைவகிக்கின்றனர்.

42 ஆவது ஆண்டு கூட்டத்தொடர் மூன்று மாதங்களுக்கு நீடிக்கும்.

சர்வதேசப் பிரச்சினைகள் இக்காலத்தில் அலசி ஆராயப்படும்.

ஐ. நாவின் சகலஉறுப்பு நாடுகளும் பங்கு பற்றும் அமைப்புத்தான் ஐ. நாவின் பொதுச்சபை.

ஐ. நா. சாசனத்தின் கீழ் 1945 இல் பொதுச் சபை நிறுவப்பட்டது.

ஐ. நாவின் ஏனைய உப அமைப்புக்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வது, ஐ. நாவுக்குப் பொது செயலாளரைத் தெரிவு செய்யும் அதிகாரங்கள் ஐ. நா. பொதுச் சபைக்கு உண்டு.

தற்போது நடைபெறும் கூட்டத் தொடரில் 140 விஷயங்கள் நிகழ்ச்சி நிரலில்சேர்க்கப் பட்டுள்ளன.

நிறவேற்றுமையில் இருந்து அபிவிருத்திப் பணிவரையும்-

ஆயுதப் பரிகாரணத்தில் இருந்து விண்வெளி ஆராய்ச்சி வரையும்— மனித உரிமையில் இருந்து அமைதி காக்கும் படைகளை அனுப்பும் விஷயம் வரையும் இப் பட்டியலில் அடங்கியுள்ளன,

மூன்றும் உலக நாடுகளைகடன் தொல்லையில் இருந்து காப்பாற்றுவது பற்றி சர்வதேச ரீதியில் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் பற்றி ஆராய்வதே இந்தக் கூட்டத் தொடரின் முக்கிய நிகழ்ச்சியாக அமையும்.

ஐ. நா. ஸ்தாபனத்தையும் நிதி நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவது குறித்தும் இத்தொடரில்

> ஐ. நா. ஸ்தாபனம் உலக அமைதி, வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றது. இந்த ஸ்தாபனத்தின் பிரதான அமைப்பான ஐ. நா. பொதுச்சபையின் 42 ஆவது ஆண்டுப் பொதுச்கூட்டம் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமானது.
>
> ஐ. நா. வின்கடந்த காலப்பணிகள், நடைமுறைபற்றி விளக்கும் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

ஆராயப்படவிருக்கின்றது.

இந்த ஆண்டு பொதுச் சபையின் தலைவராக ஜேர்மன் ஜனநாயகக்குடியரசைச் சேர்ந்த திரு. பீட்டர் புளோரின்தெரிவு செய்யப்படுவார்,

அதன் பின்னர் பொது விவாதம் ஒன்று மூன்று வாரங்களுக்கு இடம் பெறும்;

அப்போது உலகப்பிரச்சினைகள் குறித்து நாடுகளின் தூதுக்குழுத் தலைவர்கள் பேசுவர்.

பொது விவாதம் முடிந்த பின்னர் தான் நிகழ்ச்சி நிரலில் உள்ள விஷயங்கள் ஒவ்வொன்ருக ஆராயப்படும்

சில விஷயங்கள் பொதுச்சபை நேரடியாகக் கையாளும்பெரும்பாலான விஷயங்களைப் பரிசிலனை செய்ய ஏழு பிரதானக் குழுக்கள் அமைக்கப்படும்.

முதலாவது கமிட்டி, சிறு ஆயுதப்பரிகரணம் பற்றியும் சர்வதேச பாதுகாப்புபற்றியும் ஆராயும்.

இரண்டாவது கமிட்டி' பொருளாதாரம் மற்றும் நிதி பற்றிக் கவனிக்கும்.

மூன்றாவது கமிட்டி சமூக, மனித உரிமை, கலாசார சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆராயும்.

நான்காவது கமிட்டி, சுயாட்சி அற்றபிரதேசங்கள் பற்றி ஆராயும்.

ஐந்தாவது கமிட்டி, ஐ நா. நிர்வாகம், நிதி, பட்ஜட் சம்பந்தப்பட்டது.

ஆறாவது கமிட்டி, சர்வதேச சட்டப்பிரச்சினைகளை ஆராயும்.

ஏழாவது விசேட கமிட்டி: இது அரசியல் விஷயங்கள், விண்வெளி ஆராய்ச்சி, அமைதியை உருவாக்குவது, நிறவேற்றுமை, மத்திய கிழக்கில் நிலவும்அகதிப் பிரச்சினை ஆகியவற்றைக் கவனிக்கும்.

ஒவ்வொரு கமிட்டியும் விஷயங்களை ஆராய்ந்து தனது சிபார்சைபொதுச் சபைக்கு அனுப்பும்.

பொதுச்சபைசிபார்சை ஏற்றுக் கொள்ளும்: அல்லது நிராகரிக்கும்.

சர்வதேச அமைதி, பாதுகாப்பு,புதியஉறுப்பு நாடுகளை ஐ. நா வில் சேர்த்துக் கொள்ளுவது ஆகியபிரேரணைகள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும்.

ஏனையவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் படலாம்,

பெரும்பாலும் தீர்மானங்கள் வாக்கெடுப்புக்கு விடப்படாமல் கருத்து உடன்பாடு காணப்பட வேண்டும் என்ற கொள்கையையே ஐ நா. கடைப்பிடித்து வருகின்றது.

ஐ. நா.பொதுச்சபை, கடந்த 42 ஆண்டுகளின் போது நிறைவேற்றிய சில தீர்மானங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை.

அவற்றில் சில வருமாறு:

★ பலஸ்தீன பிரிவினை பற்றியது

★ சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்.

★ ஏகாதிபத்தியத்துக்கு குடிவு கட்டும் தேவை பற்றியது,

★ மனிதஇனத்துக்கு எதிரான செயலாக நிறவேற்றுமையைக் கண்டித்து.

★ ஐ நா. வளர்ச்சித் திட்டம் நிறுவியது.

★ யார் செய்தாலும் பயங்கரவாதத்தைக் கண்டிப்பது.

பலஸ்தீனம், நமீபியா ஆயுதபரிகரணம், ஆபி[illegible] நிலைமை ஆகியனகுறித்து [illegible] களில் ஐ. நா. பொதுச் சபை, பதினொரு விசேட கூட்டங்களை நடத்தியது.

ஒன்பது 'அவசரவிசேட கூட்டங்களையும் ஐ. நா. பொதுச்சபை கீழ் வரும் விஷயங்களுக்காககடந்த காலங்களில் நடத்தியது.

★ மத்திய கிழக்கு (1958-67)

★ ஹங்கேரி [1956]

★ சூயஸ் [1956]

★ கொங்கோ [1960]

★ ஆப்கானிஸ்தான் [1980]

★ பலஸ்தீனம் [1980]

★ நமிபியா (1981)

★ ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசம் (1982)

இரண்டு வல்லரசுகள் அமெரிக்கா, சோவியத் யூனியன் அணு ஆயுதக் குறைப்புச் சம்பந்தமாக கொள்கையளவில் உடன்பாடு ஒன்றைக் கண்டுள்ள சமயத்தில் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பித்து உள்ளது.

இன்று திங்கள் அமெரிக்க அதிபர் றேகன் ஐ. நா. வில் பேசவிருக்கின்றார்.

பேச வரும்படி சோவியத் தலைவர் கோர்பச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட

## புலோலி மேற்குப் பகுதி விவசாயிகளுக்கு வெங்காயம் பயிரிட உதவி செய்யுங்கள்

க. தங்கராஜா

கடந்த மூன்று நான்கு வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் 1983 ஆம் 1985ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரு வெள்ளம் ஆகியவற்றால் -புலோலி மேற்குப் பகுதியில் வெங்காயச்செய்கை மற்றும் உப உணவுச் செய்கைபோன்றவற்றில் ஈடுபடும் சுமார் 175குடும்பங்களைக்கொண்ட விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இப்பயிர்ச் செய்கை நிலங்கள் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்து உள்ளன. அரசின் ஆயிரம் மீற்றர் சட்டத்தாலும் அதன் தொடர்பான இராணுவ நடவடிக்கைகளினாலும் கடந்த காலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியவில்லை.

விவசாய நிலங்களில் எல்லைகளைக் கூறுவதானால் வடக்கே கடற்பகுதியும், தெற்கே வியாபாரிமூலை வீதியும் குடியிருப்புகளும், கிழக்கே ஹாட்லிக்கல்லூரி விடுதி, ஆலடிப் பிள்ளையார் கோவில் என்பனவும் மேற்கே தெணி அம்மன் வீதியுமாகும்.

இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களும், துப்பாக்கிவேட்டுகளும் விவசாயிகளை கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதிகளுக்கு போக முடியாமல் செய்து விட்டது.

அடுத்து 1983ஆம் 1985ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இடம்பெற்ற வெள்ள அழிவுகளினால், ஒவ்வொரு வருடத்திற்கும் கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபா பெறுமதியான வெங்காயச் செய்கை அழிந்து போய் விட்டது.

வெள்ள நிவாரணம் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் வீட்டிற்கு அலைந்து திரிந்து நட்டம் அடைந்ததுதான் மீதமாகிற்று.

வெள்ளத்து அழிவுகள் பற்றி பலமுறை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் கஷ்டங்களை எடுத்துச்சொல்லியும், எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் போனது எமது துர் அதிர்ஷ்டமே. இப்படியான அழிவுகள் எதிர் காலத்திலும் தொடராது, முடிந்த கதையாக இருக்க வேண்டும் என்பதே இப்பகுதி விவசாயிகளின் வேணவா.

மேற்கூறிய காரணங்களால் இந்நிலங்களையே நம்பியிருந்த 175 குடும்பங்களைக் கொண்ட 600 பேர் வறுமையின் எல்லைக்கோட்டில் நின்று அவதியுறுகின்றார்கள்.

இவர்களின் இப்பரிதாப நிலையைக் கண்ட சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் இவ்விவசாயிகள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து அவர்கள் சார்பில் யாழ் அரசாங்க அதிபர், புனர்வாழ்வு அமைச்சு, சமூக சேவைகள் திணைக்களம், மற்றும் அதிகள் புனர்வாழ்வுக் கழகம், பருத்தித்துறை பிரஜைகள் குழு போன்றோருக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரின் சிபார்சோடு அனுப்பி வைத்தனர்.

அத்தோடு இது தொடர்பான விடயங்களை அரசாங்க அதிபரின் பிரதிநிதியோடு கலந்துரையாடியும் விளக்கினர்.

மேலும் புனர்வாழ்வு அமைச்சு, சமூகசேவைகள் திணைக்களம் என்பவற்றில் இருந்து எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களில் 'இதுவரையில் இவற்றிற்கான நிவாரணங்கள் பெற்று இருப்பீர்களென நம்புகின்றோம், அப்படிப் பெற்றுக்கொள்ளாவிடில் அரசாங்க அதிபரைச் சந்தித்து ஆகவேண்டியனவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனல நாம் தொடர்ந்து முயற்சி செய்த போதும் இதுவரை இந்த ஏழை விவசாயிகளுக்கு எதுவிதமான நிவாரண உதவியும் கிடைக்கவில்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்

தற்போது ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இவ் விவசாய நிலங்களில் திரும்பவும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுவதற்கு இப்பகுதி விவசாயிகள் ஆர்வமாக உள்ளபோதும் இக் காலபோகத்துக்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியுமோவென பின்வரும் காரணங்களால் பயப்படுகின்றார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையில் மந்துக்காடாக இருக்கும் நிலங்களைத் துப்புரவு செய்வதற்குத் தடையாக இராணுவத்தாலும் போராளிகளாலும் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்படாமை'

எதிர் வரும் போகச் செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாக அல்லற்பட்டுக் கொண்டிருக்

[ 5ஆம் பக்கம் பார்க்க]



### பொய்யாமொழி

குறள்:

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

பொருள்:

நாட்டைக் காக்கும் தலைவன் முறைப்படி காக்காவிட்டால்; அந்நாட்டில் பசுக்கள் பால்தருதலாகிய பயன் குன்றும்; அந்தணரும் அறநூல்[illegible] மறப்பர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தென் இலங்கை பிரமுகர் வடமராட்சி விஜயம்

தென் இலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த மத குருமார் உட்படத் தென்னிலங்கைப் பிரமுகர்கள் பலர் வடமராட்சியில் கடந்த கால இராணுவ அட்டூழியங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேரில் பார்த்தனர்.

மேற்படி குழுவில் கரம்பை குணனந்த தேரர், புத்தியாக சந்திராரட்ண தேரர் பதும' சிறிதேரர், வண. தேவானந்தா, வண. ஜோன் ஐசாக், பிரதி அமைச்சர் செல்டன் ரணராசா, திருமதி ஸ்ரீபன், டாக்டர் றிச்சாட் பெரேரா ஆகியோர் அடங்கி இருந்தனர்.

மேலும் இரு வாகனங்களில் வந்து பார்வையிட்டதுடன் படுமோசமாகப் பாதிப்புக்குள்ளான வல்வை ஆதிகோவிலடி வாசிகளுக்கு ஆறுதலும் கூறிச் சென்றனர். (சி-160)

## இலங்கை வங்கி சிறுகதைப்போட்டி

யாழ்ப்பாணம், செப். 20

இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது. போட்டிக்குரிய படைப்புக்களை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1-12-87 ஆகும்.

முதற் பரிசாக ரூபா 1,500க்குக் குறையாத பெறுமதி மிக்க பொற்கிளி அல்லது தங்கப்பதக்கம் வழங்கப்படும். இரண்டாம், மூன்றும் பரிசுகளாக ஒரு தொகை ரொக்கப் பணம் வழங்கப்படும்.

இவை தவிரப் பாராட்டுப்பெறும் ஐந்து படைப்புக்களுக்கான பரிசுகள் ரொக்கம் வைப்பிலிடப்பட்டு, இலங்கை வங்கிச் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படும். போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் நெல்லியடி, கரவெட்டி இலங்கை வங்கி முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (இ)

## சந்தேக நபர் தப்பினார்

கொழும்பு, செப். 21

தீவிரவாத சம்பவங்கள் தொடர்பாக கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐ. ராஜபக்ஷ என்ற சந்தேக நபர் தப்பி ஓடிவிட்டார் என்று அறிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் நிலையக் கூண்டுக்குப் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்தே அவர் தப்பி ஓடினார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

அரசின் பகடைக் காய்களாக

# அப்பாவிச் சிங்கள மக்களே தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றம்

## வெகுஜன இயக்க அரசு வேண்டும் என்கிறார் வாசு

யாழ்ப்பாணம், செப். 21

தற்போதைய அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் அப்பாவிச் சிங்கள மக்களைப் பகடைக்காய்களாக்கி குடியேற்றி வருகிறது.

—இவ்வாறு தற்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் நவ சமசமாஜக் கட்சியின் அமைப்புச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்த அரசாங்கமும் இதற்கு முன்பிருந்த சிங்களப் பௌத்த முதலாளித்துவ அரசாங்கங்களும் பொதுவாக தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் ஆகியோரையும் குறிப்பாக தமிழ்த் தேசிய இனத்தையும் ஏமாற்றியும் அடக்கி ஒடுக்கியும் வந்துள்ளன.

தற்போதைய அரசாங்கம்' அதற்கு இன்று துணைபோகும் இந்திய ஆட்சியாளரின் பக்கபலத்துடன் தனது ஏமாற்று வித்தையையும் அடக்கு முறையையும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

தமிழ்ப் பேசும் மக்களுக்கு எந்தவித ஒப்பந்தத்தின் கீழ் என்றாலும் ஏதாவது சலுகைகள் தானும் வழங்கப்படக் கூடுமாயின் நாம் அவற்றை ஒளிவு மறைவின்றி ஆதரித்து வந்துள்ளோம். ஆனால் பிரகடனங்களில் மட்டும் நாம் எந்த வித நம்பிக்கையும் வைத்திருக்கவில்லை.

இன்றைய கட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எந்த ஒரு ஒப்பந்தமும் முக்கியமாக ஒரு கருத்தைக் கொண்டதாகவே இருக்க வேண்டும். அது— வடக்கு, கிழக்கு மக்களுக்கான பிரதேச சுயாட்சி அமைப்பாகும். ஆனால் இது நீண்ட காலத்துக்கு தள்ளிவைக்கப்பட்டு வருகிறது.

இதற்குப் பதிலாக எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாகவே இந்திய இராணுவத்தின் உதவியுடன் நாடகங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாகச் சொல்வதாயின், அரசியல் கைதிகள் ஒழுங்காக விடுதலை செய்யப்படவில்லை. மகாவலி போன்ற வளமான பிரதேசங்களை அந்நிய கம்பனிகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்துள்ள இந்த அரசாங்கம் தமிழ் பகுதிகளில் அப்பாவிச் சிங்கள மக்களைப் பகடைக் காய்களாக்கி குடியேற்றி வருகிறது.

இவை தமிழ்பேசும் மக்களை உண்மையில் ஆத்திரமடையவே செய்யும்.

இப்பொழுது வடக்கு கிழக்கில் நடைபெறும் ஹர்த்தால், உண்ணாவிரதப் போராட்டம் போன்றவை இதன் ஆரம்ப வெளிப்பாடாகும்.

தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தில் ஒரு புதிய கட்டம் ஆரம்பமாகியுள்ளதுடன், எதிரியின் பக்கத்திலும் புதிய கூட்டுகள் உருவாகி வருவது போல் தெரிகிறது.

எனவே, விடுதலைப் போராட்டத்திற்கு புதிய பரிமாணங்களும், நோக்கங்களும் ஏற்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

### இடைக்கால அரசு

இந்தக் கட்டத்தில், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படுவதே உடனடித் தேவையாகும்.

இந்த நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் அனைத்து மக்களினதும் விடுதலை என்ற அடிப்படை நோக்கத்திற்காகத் தென் இலங்கையிலுள்ள தொழிலாளி வர்க்கமும் இடதுசாரிச் சக்திகளும் வடக்கு, கிழக்கிலுள்ள விடுதலைப் போராட்ட சக்திகளும் ஒற்றுமைப்படவேண்டும். இதற்காக நாம் இடையறாது உழைத்து வந்துள்ளோம்.

இன்றைய முக்கியமான காலகட்டத்தில் வலதுசாரி பேரினவாத சக்திகளுக்கும், யூ. என். பி. அரசாங்கத்துக்கும், அதன் இந்திய ஆதரவாளர்களுக்கும் எதிராக மிகக் கடுமையான போராட்டத்தை நடத்துவதற்கு மேற் கூறிய சக்திகள் ஒன்றுபடவேண்டும் என்ற எமது அறைகூவலை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## புதிய இன நெல்

பத்தலகொடவில் உள்ள சர்வசேத நெல் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய இன நெல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பி. ஜி. 301 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நெல்லினம் 3 மாதம் 5 தினங்களில் விளைச்சலைத் தரக்கூடியது.

இது வரட்சியைத் தாங்கக் கூடிய விசேட இனமாகும். வறண்ட பிரதேசத்துக்குச் சிறப்பாக ஏற்றது.

வரண்ட பிரதேச விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தினால் இப்புதிய இன நெல் விநியோகிக்கப்படுகின்றது. (இ-எ)


# சவூதி அரேபியா வேலை வாய்ப்புகள்

1. உடனடியான பயணம் OPEN VISA
   1. Drivers - 700 SR
   2. Labourers - 500 SR

(வயது: 25 - 45) FLIGHT 25th

★ லிபியா LIBIYA ★

Petroleum Company Cleaners

(4,000 ரூபா இலங்கைப்பணம், சாப்பாடு, தங்குமிடவசதி)

★ சவூதி அரேபியா

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | A/C TECHNICIAN | 3 | — 600 SR | — 100 SR |
| (2) | A/C TECHNICIAN | 10 | — 550 SR | — 00 SR |
| (3) | ELECTRICIAN (Foremen) | 3 | — 750 SR | — 100 SR |
| (4) | TRAILOR DRIVERS | 88 | — 700 SR | — 100 SR |
| (5) | PETROL/DIESEL | 10 | — 700 SR | — 100 SR |

(வயது: 25 — 45)

★ சவூதி அரேபியா

Hospital Cleaners

சவூதி அரேபியா Hospital Cleaners — Salary 500 SR

(வயது: 23 — 40) (With Food)

★ பிரயாணம் 10 - 10 - 87

★ சவூதி அரேபியா

(வயது 22 - 44)

(1) Mason (2) Carpenter (3) Drivers
(4) Supervisor (5) Foremen (6) Forklift Operator
(7) Tally Clerk (8) Winch Operator (9) Labourer

★ அபுதாபி

பணிப்பெண்கள் House Maid

(வயது: 18 — 37)

மற்றும் குவைத், பாஹ்றின், ஓமான், சவூதி, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பணிப்பெண்கள் உடன் தேவை.

6 படம், 1 முழுக்கலர்ப்படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T. V. TRAVELS TOURIST
Brown Road, Kokuvil.
(STATION முன்பாக)


### மக்கள் முகம்

## அச்சுவேலி பிரஜைகள் குழு நிர்வாகிகள்

அச்சுவேலி, செப். 21

அச்சுவேலி பிரஜைகள் குழுவின் புனருத்தாரண பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஜே. எம். யோசேப்பு, செயலாளர்: சட்டத்தரணி திரு. எஸ் சபாரத்தினம் பொருளாளர் திரு எஸ் சந்திரலிங்கம். அத்துடன் நிர்வாக குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (ஒ-11)

## பளைப்பகுதி பிரஜைகள் குழு உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், செப். 21

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பிரஜைகள் குழு ஒன்று அங்குராப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பளை உதவி அரசாங்க அதிபரை போஷகராகக் கொண்ட இக்குழுவுக்குத் தலைவராக திரு. சி. சுந்தரலிங்கமும் பிரதித் தலைவராக திரு. க. மகாலிங்கமும் இணைச் செயலாளர்களாக திரு ம. குமாரவேலு, திரு. ப. அரியரத்தினம் ஆகியோரும் பொருளாராகத் திரு இ. செல்லத்துரையும் தெரிவாகினர்.

மேலும் பதினைந்து பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவாகினர். (ஒ-கு)

## ஆலங்கேணி இந்து இளைஞர் மன்றம்

கிண்ணியா, செப். 21

ஆலங்கேணி இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் ஆலங்கேணி விநாயகர் தமிழ் வித்தியாலயத்தில் மூன்னாள் தலைவர் கு. கோணாமலை தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு:-

தலைவர்:- திரு. க. விஜயகுமார் உபதலைவர்:- திரு. வே. மோகன் செயலாளர்:- திரு. ச. பவானந்தன் உபசெயலாளர்:- திரு. வ. மனோகரன் பொருளாளர்:- திரு. க. சுதாகரன்.

மேலும் செயற்குழு உறுப்பினராக [illegible] தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ)

## ராஜீவ் வந்த போது வெடி கொளுத்தியோரை விட்டுவைக்கக் கூடாது

### இப்படிச்சொல்லித் தாக்கினராம்

கிளிநொச்சி செப் 20

ராஜீவ் காந்திவந்த போது வெடிகொழுத்தி ஆரவாரம் செய்த தமிழர்கள் எவரும் இங்கு உயிருடன் விட்டுவைக்கக்கூடாது என எம்மை தாக்கி வெட்டி எமது வீடுகளையும் தீவைத்தனர். எமது பாதுகாப்புக்கு வந்த இலங்கை ராணுவத்தினரும் பொலீசாரும் சிங்களவர்களுடன் சேர்ந்து எம்மை தாக்கினர் நாம் உடுக்க உடை இன்றி சாப்பிட வழியின்றி பல நாட்கள் காடுகளில் பதுங்கி இருந்தோம்.

களுத்துறை மாவட்ட எல்லைக்கந்தை, கோறளை, புளத்சிங்கள, எட்டதொல, மிரிதிகல, ஆகிய இடங்களிலிருந்து அகதிகளாக கிளிநொச்சி வந்த தமிழ் அகதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரம் தொடர்பாக கடந்த 16 ஆம் திகதி வரை சுமார் 115 குடும்பங்களைச் சேர்ந்த 500 க்கு மேற்பட்ட அகதிகள் கிளிநொச்சிக்கு வந்துள்ளனர் மேலும் பலர் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளனர்.

இவ்வாறு அகதிகளாக வந்த இவர்களை கிளிநொச்சியிலுள்ள அரச அதிகாரிகளோ, பொது ஸ்தாபனங்களோ இதுவரை சென்று இவர்களுக்கு வேண்டிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

[illegible] அகதிகளாக வந்த பலரும் கிளிநொச்சி ஜெயந்தி நகரை அண்மித்த செல்வா நகரில் தமிழ்ச்சங்கக் காணிகளில் இலை குழைகளால் குடிசை அமைத்து உண்ண உணவின்றி உடுக்க உடை இன்றி இருக்க உறைவிடம் இன்றி மிகவும் பரிதாபகரமான நிலைக்குள்ளாகியுள்ளனர். [ஒ-76]



உண்ணாவிரதப் போரில் குதித்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபனைப் பார்வையிடுவதற்காக இந்திய சமாதானப்படை அதிகாரி மேஜர் சாயி கடந்த வியாழக்கிழமை மாலை வந்தபோது எடுக்கப்பட்டபடம். படதில் புலிகள் பிரமுகர் யோகியும் காணப்படுகிறார்! (படம்: ஜெயம்)

ராஜீவிடம் கோரிக்கை:

## தமிழ் மக்களை கைவிடவேண்டாம்

### பல அமைப்புக்கள் மகஜர்

யாழ்ப்பாணம், செப். 21

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்தும், புலிகளின் ஐந்து அடிப்படைக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் மகஜர்கள், கடிதங்களைப் பல பொது அமைப்புக்கள் அனுப்பிவைத்திருக்கின்றன.

பாரதப் பிரதமரை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்த தமிழீழ விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் கைவிடவேண்டாம் என்று ராஜீவ் காந்தியை இந்த அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம், வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம், தொண்டமானாறு கிராம மட்ட கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, நெல்லியடிப் பிரஜைகள் குழு, பிரஜைகள் குழுக்களின் கூட்டமைப்பு, வடமாகாண தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் சமாசம் வடபிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பவை இவ்வாறு மகஜர் அனுப்பிய சங்கங்களில் சிலவாகும். (உ-எ)

## திலீபனின் உயிருக்கு இந்திய அரசே பொறுப்பு

### பிரஜைகள் குழு அறிக்கை

பருத்தித்துறை, செப் 21

திலீபன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதன் பொறுப்பை இந்திய அரசே ஏற்கவேண்டும்.

பருத்தித்துறை பிரஜைகள் குழு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

திலீபனின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல் விடுவதன் மூலம் ஏற்படும் தமிழீழ மக்களின் அசௌகரியங்களை தீர்க்கும் பாரிய பணியும் இந்திய அரசையே சார்ந்ததாகும்.

காலங்காலமாக ஒப்பந்தங்களிலும் வாக்குறுதிகளிலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்தனர்.

இன்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட்டனர்.

இன்று தமிழ் ஈழத்தில் நடைபெறும் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக திலீபனால் முன்னெடுக்கப் பட்டுள்ள சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆதரித்து அணிதிரளுமாறு வேண்டுகிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உண்ணாவிரதப் போரை:

## மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப், 18

தமிழீ விடுதலைப் புலிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை மனிதாபிமான ரீதியில் இரண்டு அரசுகளும் அணுக வேண்டும் என்று இனங்களுக்கு இடையேயான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் வடபிரதேசக்கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியத் தூதருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது!

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வாக வைக்கப்பட்ட அம்சங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

பதிலாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுவது சிங்களக் குடியேற்றங்களை அவசர அவசரமாக நடத்துவது. அரசியல் கைதிகளை விடுதலை செய்யாது காலம் கடத்துவது ஆகியன இடம்பெறுகின்றன.

இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தை மழுங்கடிப்பதாக உள்ளது.

சமாதானத் தீர்வு ஒன்றை அமுல் நடத்த முன்வந்துள்ள இந்திய அரசு ஒப்பந்த விஷயங்களை உடனடியாக அமுல் நடத்தவேண்டும்.

—இப்படி கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (உ-எ)

## யாழ் பிரஜைகள் குழு ராஜீவுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப். 20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுச் செயலாளர் திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதம் தொடர்பாக யாழ் பிரஜைகள் குழுவின் உபதலைவர்கள் வணபிதா மைக்கல் சாமி, திரு. ஆர். பாலசுப்பிரமணியம் இந்தியப் பிரதமருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

உண்ணாவிரதமிருக்கும்

(6-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மகமும் தர்மம், முத்துச்சிப்பியும் முத்தும் போன்றது.
— ஸ்ரீமத் சுவாமி செங்கா தரானந்தா


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 892/2 நாவலர் வீதி, தொலைபேசி 24605
யாழ்ப்பாணம். 22073
21.9.1987 த.பெ.இல: - 23


## அவருக்கு ஒரு பரிசு தேவை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, புதிய அரசியல் சமன்பாடு ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்! பாவம். அதற்காக அவருக்கு நோபல் பரிசுக்குச் சமமான ஏதாவது சர்வதேசப் பரிசு ஒன்றை வழங்கியாக வேண்டும்!!

இலங்கையில் வாழும் இரண்டு சிறுபான்மை இனங்களான தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அவர்களின் குடிசன எண்ணிக்கைக்கு, விகிதாசாரத்துக்கு ஏற்பவே உரிமைகள் வழங்க வேண்டும். இதுவே அம்மையார் கண்டுபிடித்திருக்கும் புதிய அரசியல் சூத்திரம் அல்லது சமன்பாடு.

மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள் உயர்ந்தவர், தாழ்ந்தவர்; பெரியவர், சிறியவர்; ஏழை, பணக்காரர்; ஆகிய வேறுபாடுகள், பேதங்கள், ஏற்றத்தாழ்வுகள் அநீதியானவை, நியாயமற்றவை. மனிதர்கள் எல்லோருக்கும் சம உரிமைகள் உண்டு. ஒருவருக்கு அதிகளவு உரிமைகளும், மற்றவக்ருக்குக் குறைந்தளவு உரிமைகளும் உண்டு என்று பேதப்படுத்த முடியாது. எல்லோருக்கும் எல்லா விடயங்களிலும் சம உரிமை உண்டு. சமத்துவம், பொதுவுடைமை, சோசலிசம் என்ற கோட்பாடுகளுக்கு — சித்தாந்தங்களுக்கு அதுவே அடிப்படையானது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உலகத்தில் இப்போது பலராலும் விரும்பப்படுவதும், சிறந்த சமூக அமைப்பு முறை, அரசியல் அமைப்பு முறை என்று மதிக்கப்படுவதும் சோசலிசம், சமத்துவம் என்பனவாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முற்போக்குக் குணம்சம் கொண்டது எனக் கூறி இடதுசாரிக்கட்சிகள் அதனோடு இணைந்து 1970களில் ஆட்சி நிறுவியதும் உண்டு. ஆனால் அதன் இப்போதைய தலைவி பிற்போக்கிலும் பிற்போக்கான கொள்கை உடையவர் என்ற உண்மை இப்போது தானாகவே புலப்படுத்தப்பட்டுள்ளது.

மனிதனின் உரிமைகளை விகிதாசாரப்படி பிரித்துக் கூறுபோட வேண்டும் என்ற பிற்போக்கான எண்ணத்தை, வெக்கதுக்கமின்றி அச்சம் கூச்சமின்றி எடுத்துச் சொலும் அளவுக்கு படு பிற்போக்கு வாதியாகத் திகழ்கிறார் திருமதி பண்டாரநாயக்கா. பல இன மக்கள் வாழும் நாட்டுக்குப் பிரதமராக இருப்பதற்குத் தாம் அருகதையற்றவர் என்பதையும் அவர் சொல்லாமற் சொல்லிவிட்டார்.

மனித உரிமை. ஆட்சி உரிமை, நிர்வாக உரிமை, கல்வி உரிமை, காணி உரிமை, உணவு உரிமை, குடியிருப்பு 'உரிமை என்று எல்லா உரிமைகளையும் விகிதாசார முறையில் பங்கிடு செய்யவேண்டும் என்று பைத்தியகாரத்தனமாக, இல்லை, இல்லை பேரினவாதப் பித்துப் பிடித்தவராக அம்மையார் உளறியிருக்கிறார்.

அரசியல்வாதிகளுக்கு இப்போதெல்லாம் வயது ஏறஏற, பித்தமும் அறளையும் அதிகமாகி விடுவதைக் காண்கிறோம். சிந்தனைக்கு ஒவ்வாத, வாதத்துக்கு நின்றுபிடிக்க முடியாத விஷயங்களை அர்த்தபுஷ்டியில்லாமல் அலம்புவதும், உளறுவதும் நம்நாட்டு அரசியல் ஆகிவிட்டது. தாமும் அதற்கு விதிவிலக்கல்லர் என்று சிறிமாவோ அம்மையாரும் நிருபித்திருக்கிறாரோ?

அம்மையாரின் அரசியல் சமன்பாட்டின் பிரகாரம் இலங்கை தனிச்சிங்கள நாடாகவும், சிங்களமே தனிஆட்சி மொழியாகவும், பௌத்தமே இலங்கையின் மதமாகவும் இருக்கவேண்டும் என்ற அர்த்தம் பிறக்கிறது. அம்மையார் ஒரு சோஷலிசவாதி என்று நினைத்தவர்களுக்கு, தாம் அதுவல்லர், பெரும் சிங்கள பௌத்த பேரினவாதி என்று அடித்துச் சொல்லியிருக்கிறார் அவர்!

இவ்வாறான சிந்தனையும் செயலும் உள்ள அரசியல் தலைவர்கள் தென்னிலங்கையில் இருக்கும்போது, தமிழர்களும் முஸ்லிம்களும் தங்கள் பிறப்பு உரிமைகளை, பூரணமாக அனுபவிப்பதாயின் அவர்களுக்கெனத் தனி நாடு கோராது வேறென்ன செய்வது?

#### ஒப்பந்தத்திற்கு முன் கைதான

## பல்கலைக் கழக மாணவர்கள் விடுதலை

கொழும்பு, செப்.21

ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலோர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

விசாரணை முடியாத காரணத்தை முன்னிட்டு மிகச் சிலரே இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இத்தகவலைப் பல்கலைக் கழக மான்யக் கமிஷன் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே தெரிவித்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர் கைது செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவரை விடுவிப்பதில் வெற்றி கிடைக்கவில்லை. ஒப்பந்தத்தை எதிர்த்து நடத்தப்பட்ட குழப்பங்களில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர் என்பதற்குச் சாட்சியங்கள் இருப்பதினாலேயே அவர்களை விடுவிக்க முடியவில்லை.

இப்படி டாக்டர் கல்பகே தெரிவித்தார். (இ-எ)

#### விடுதலைப்போர் தணியும் அறிகுறி:

# கூர்க்கலாந்துக்குப் பதிலாக மலைப்பிரதேசக் கவுன்ஸில்

### சுபாஷ் கிஷிங்கும் இணக்கம்

டார்ஜீலிங், செப் 20

கூர்க்ககாலந்துக்குப் பதில் மலைப் பிரதேசக் கவுன்ஸில் ஒன்றை அமைப்பதுசம்பந்தமான யோசனை மத்திய அரசிடமிருந்து வந்தால் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கூர்க்கலாந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ்கிஷிங் முன்கண்டவாறு அறிவித்தார்.

சலிம்பொஸ் என்னுமிடத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் சுபாஷ்கிஷிங் பேசினார்.

அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை கூர்க்கா இன மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக 'டார்ஜீலிங் மலைப்பிரதேச கவுன்ஸில்' ஒன்றை அமைக்க அனைத்துக் கட்சிகளும் இணங்கியுள்ளன.

இக் கவுன்ஸில் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள மூன்று மலைப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

கவுன்ஸிலின் உறுப்பினர்களாக 42 பேர் மக்களினால் தெரிவு செய்யப்படுவர்.

இத் திட்டம் 17 அரசியல் கட்சிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இது சம்பந்தமான அனைத்துக் கட்சி மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை கல்கத்தாவில் நடைபெற்றது.

மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதி பாசு மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

கூர்க்கலாந்து கோரி கூர்க்கா இன மக்கள் திரு, சுபாஷ் கிஷிங் தலைமையில் போராடி வருவது தெரிந்ததே. (உ-எ)

#### 4 கோடி டாலர் பெறுமதியான

## 200 இரு. ஹெரோயின்

### பம்பாயில் கைப்பற்றப்பட்டது

பம்பாய், செப். 20

பம்பாயில் நேற்று இருநூறு இருத்தல் போதைவஸ்து (ஹெரோயின்) சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

அமெரிக்காவுக்கு விமானம் மூலம் அனுப்புவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் துப்பாக்கிச் சண்டை ஒன்றின் பின்னர் போதைவஸ்தைக்கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட போதைவஸ்தின் மேற்கு நாட்டு வெளிச் சந்தை விலை 40 மில்லியன் டாலர்கள்என்று பி.பி.சி அறிவித்தது.

இது தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நான்கு பேர் பஞ்சாப் மாநிலத்தவர்.

பாகிஸ்தானில் இருந்து அமிர்தசெரெஸ் ஊடாக இப்போதைவஸ்து டம்பாய் கொண்டு வரப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

துப்பாக்கிச் சண்டையின்போது ஒரு கடத்தல் காரர் காயமடைந்தார்.

கடந்தஇரண்டு மாதங்களில் இந்தியாவில் இருந்து 100 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில்) பெறுமதியான ஹெரோயின்போதைவஸ்து கடத்தப்படவிருந்த போது கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஹொங்கொங்கில் பதினைந்து லட்சம் டாலர் பெறுமதியான போதைவஸ்து (ஹெரோயின்) அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

தாய்லாந்தில் இருந்து வந்த எச்.எம்.எஸ்.'சுவிப்ட்', என்ற ரோந்துப் படகில் இருந்து இது கைப்பற்றப்பட்டது.

சீனர்கள் நான்கு பேர் இதுசம்பந்தமாகக் கைது செய்யப்பட்டனர்.

### ராவல்பிண்டியில் குண்டு வெடிப்பு

ராவல்பிண்டி, செப். 20

குண்டுவெடிப்புச் சம்பவம் ஒனறில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

ராவல்பிண்டியில் சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

பாகிஸ்தான் பிரதமர் முகமட்கான் ஜுனஜோ அமெரிக்கா புறப்பட விமான நிலையத்துக்குச் சென்றிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றது. (உ-எ)

### 80 சிப்பாய்கள் விடுதலை

மனுகுவா, செப், 20

சிறைபிடிக்கப்பட்ட 80 நிக்கரகுவா அரசுச் சிப்பாய்களை கொன்ருக் கிளர்ச்சிக்காரர்கள் கடந்த சனிக்கிழமை விடுவித்தனர்.

அச்சிப்பாய்களை கொஸ்டரிக்கா நாட்டின் அதிகாரிகளிடம் கிளர்ச்சிக்காரர்கள் ஒப்படைத்தனர்.

மத்திய அமெரிக்கா நாடுகளின் சமாதான உடன்படிக்கையின் கீழ் அவர்களை விடுவிப்பதாகக் கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்தனர். (உ-எ)

### வளைகுடாவில் தீவிரயுத்தம்

தெஹ்ரான், செப் 20

வளைகுடா யுத்தம் தீவிரமடைந்து வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

ஈரானின் பல எண்ணை வயல்கள்மீது ஈராக்விமானப்படைகள் உக்கிரமான தாக்குதல்களை நடத்தின.

அதுபோல ஈரானின் விமானப் படைகளும் ஈராக்கின் பல நகரங்கள் மீது தாக்குதல்களை நடத்தின. (உ-எ)

### ஜப்பான் மன்னர் நோயினால் பாதிப்பு

டோக்கியோ, செப். 20

உலகிலேயே நீண்டகாலமாக மன்னராக இருந்துவரும் ஜப்பான் மன்னர் ஹிரோஹிட்டா கடுமையான குடல் நோயினால் அவஸ்தைப் படுகின்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

86 வயதான மன்னர் கடந்த வெள்ளிக்கிழமை எக்ஸ்ரே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அவரது உடல்நிலை அரண்மனை டாக்டர்களுக்குக் கவலையைக் கொடுத்துள்ளது. அவருக்குச் சத்திரசிகிச்சை செய்யவேண்டுமா என்பதுபற்றி டாக்டர்கள் இவ்வாரம் தீர்மானிப்பர். (உ-எ)

## தலாய் லாமா அமெரிக்கா விஜயம்

### சீன அரசுக்கு எரிச்சல்

புதுடில்லி, செப். 20

தலாய்லாமா இவ்வாரம் அமெரிக்கப் பயணம் ஒன்றை மேற்கொள்ள இருக்கின்றார்.

இது பீகிங் அரசுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவில் அரசியல் விஷயங்களை அவர் பேசினால் சீன அதை பொறுத்துக் கொள்ளாது—இப்படிசீனவெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

திபெத்தில் நிலவும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி தலாய் லாமா அமெரிக்க அதிகாரிகளுடன் பேசவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

#### வெளி உலகில்

## ஸிம்பாப்வேயிலும் ஜனாதிபதி ஆட்சி முறை

ஹராரே, செப். 20

ஸிம்பாப்வே நாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான புதிய சட்டமூலம் அரசாங்க வர்த்தகமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மக்களினால் தெரிவுசெய்யப்படுவார்.

சட்டம் அமுலுக்கு வந்தவுடன் முதலாவது ஜனாதிபதியை ஸிம்பாப்வே நாடாளுமன்றம் தெரிவுசெய்யும்.

அதற்கு இணங்க முதலாவது ஜனாதிபதியாகும் வாய்ப்பு தற்போதைய பிரதமரான திரு. ரொபர்ட் முகாபேக்குக் கிடைக்க இருக்கின்றது.

நாடாளுமன்றம் நிறைவேற்றும் சட்டமூலங்களை ரத்துச்செய்யும் உரிமை புதிய சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளது.

உபஜனாதிபதி பிரதமர், அமைச்சரவை ஆகியோரை நியமிக்கும் உரிமை ஜனாதிபதியிடம் இருக்கும். (இ-எ)

## வரட்சி நிவாரணப் பணிக்காக மேலதிகவரி

### இந்திய அரசு விதிப்பு

புதுடில்லி, செப். 20

இந்தியாவில் வரட்சி, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 540 கோடி ரூபாவுக்கு புதியவரி விதிக்கப்பட்டுள்ளது.

இதில் 224 கோடிரூபா நேரடி வரியாக வசூலிக்கப்படும்.

250 கோடி ரூபா வருமான வரியாக வசூலிக்கப்படும்.

70 கோடி ரூபா வரிப்பணத்துக்காக உள்நாட்டு விமானக் கட்டணம், குளிரூட்டிய ரயில் பெட்டிக் கட்டணம் ஆகியன அதிகரிக்கப்படும்.

புதியவரிகள் அறவிடப்படுவது 1988- 89 நிதி ஆண்டில் மட்டுமே இடம்பெறும் அதன் பின்னர் நீக்கப்படும்.

இந்தியாவின் பல மாநிலங்களில் தற்போது நிலவும் வரட்சி அடுத்த ஆண்டு ஜூன் வரை தொடரும் என்று அஞ்சப்படுகின்றது. (உ-எ

### படகுகவிழ்ந்து 17 பேர் பலி!

புதுடில்லி, செப். 20

வட இந்தியாவில் பண்டார என்ற இடத்தில் பயணிகள் படகு ஒன்று ஆற்றில் கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவரின் சடலமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

#### ஆளும் கட்சியை சேர்ந்த

## 16 பேர் இது வரை பலி

கொழும்பு, செப்.20

இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர்தென் இலங்கையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பதினறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்படிக் கொழும்புப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடைசியாக இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிபிட்டியா என்னும் இடத்தில் ஐ. தே. கட்சியின் குட்டிகலக் கிளைத் தலைவர். செயலாளர், பொருளாளர் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு இடம் பெற்றது.

கிளைத் தலைவர் குமாரசிங்காவின் வீட்டில் மூவரும் கட்சி நடவடிக்கைகள் பற்றிப்பேசிக் கொண்டிருந்தனராம்.

அப்போது வெள்ளை நிற வான் ஒன்றில் வந்திறங்கிய இளைஞர்கள் படபடஎன்று மூவரையும் நோக்கிச் சுட்டு விட்டுச் சென்றனராம்.

"அரசுக்கு பந்தம் பிடிக்க வேண்டாம். எச்சரிக்கையை மீறி நடந்தால் கொலை செய்யப்படுவீர்கள்" – இப்படி இவர்களுக்கு முன்னர்எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப் பட்டிருந்தனவாம்'

அந்தக் கடிதங்களில் அரசுடனான தொடர்பைத் துண்டிப்பதற்குப் பத்து நாள் காலக்கெடுவும் கொடுக்கப்பட்டிருந்ததாம்.

இது போன்ற கடிதங்கள் வலஸ்முல்லை, வீரகெட்டிய, மித்தெனியா ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

"பொலீஸாருக்குத் தகவல் கொடுக்க வேண்டாம்; அவர்களுடனான தொடர்புகளைக் கைவிடுங்கள். எச்சரிக்கையை மீறி நடந்தால் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பு" இப்படி அக் கடிதங்களில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

### ஐ. நா... சபை---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவ் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

இரண்டு தலைவர்களும் உச்சி மாநாடு நடத்தும் வாய்ப்பும் உருவாகி வருகின்றது.

எனவே ஐ. நா. வின் சரித்திரத்தில் 42 ஆவது பொதுச்சபை முக்கியமானதாக அமையப் போகின்றது.

### யாழ் பிரசைகள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திலீபன் முன்வைத்துள்ள கோரிக்கைகள் மக்களின் நன்மைகருதியே என்று மக்கள் உணருகின்றனர். அதனால் திலீபனின் பாதையை மக்கள் வரவேற்கின்றனர்.

அகிம்சை வழியை உலகுக்கு காட்டிய நாட்டின் பிரதமர் என்ற முறையில் இது விஷயத்தில் தலையிட்டு மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுங்கள்.

உடனடியாக ஒருபிரதிநிதியைஅனுப்பி சப்பந்தப்பட்டவர்களுடன் பேசி ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காணுங்கள்; நிலைமையை மோசமடைய விடாது தடுங்கள்.

இப்படி அந்த அவசரத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### இந்தியக் குழு

கொழும்பு, செப். 21

இந்திய ரயில்வே, அசோக் லேலண்ட் மற்றும் டாட்டா ஆகிய போக்குவரத்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்கோஷ்டி இன்று இலங்கை வந்து சேருகின்றது. [illegible]ள்ளது. (உ-எ)

#### சமய சந்நிதிகளில்

### வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23-9-87 புதன்கிழமை காலை 11. 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த அக்டோபர் 1 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூஜையாகி பகல் 11 மணிக்கு ரதோற்சவம் நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழா நிகழும். (ஒ)

### வல்லிபுரக் கோயில்கொடி

யாழ்ப்பாணம், செப் 21

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (உ)

### வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப் 20

யாழ் கோண்டாவில் அருள் மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 23-9-87 புதன் கிழமை பகல் 10. 00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் விழா நடைபெறும். 1-10-87 வியாழக்கிழமை பகல் 10. 00 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நிகழும்.

விழா நாட்களில் விசேஷ விரிவுரைகள் சொற்பொழிவுகள் நடைபெறும். (ஒ)

## புலோலி மேற்குப்----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கும் விவசாயிகளுக்கு விதை வெங்காயம், எரு உரவகைகள், கிருமிநாசினி வகைகள் போன்ற உள்ளீடுகளை சிரமமின்றிப் பெற்றுக்கொள்வதற்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

வடமராட்சி முற்றுகையின்போது, வீடுகளை விட்டுவிட்டு அகதிகளாக மற்றைய இடங்களில் இருந்த காலங்களில் விஷமிகளால் விவசாயிகளது விவசாயக்கருவிகளான மண்வெட்டி, நீர் இறைக்கும் இயந்திரங்கள், அல்கத்தின் குழாய்கள், தெளிகருவிகள், இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் என்பன களவாடப்பட்டும். சேதப்படுத்தப்பட்டும் உள்ளன.

இவற்றை சகாய விலைகளில் பெற்றுக்கொடுப்பதற்கு சமநல சேவை நிலையங்கள் உதவவேண்டும். என்பதோடு முக்கியமான தேவையான யாழ்ரக மண்வெட்டிகளை இறக்குமதி செய்து விநியோகிக்க வேண்டும்.

பயிர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக பொருத்தமான வடிகால் வசதிகள் திட்டமிடப்பட்டு அமைக்கப்படல் வேண்டும்.

பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாமல் போன காலங்களுக்கு பொருத்தமான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களில் உரிய அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென கேட்கொள்வதுடன் அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால், நீர்வேலி, இணுவில் தொடக்கம் கிளிநொச்சி, வவுனியா, புத்தளம் போன்ற பகுதிகள் வரை வெங்காயச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான பெரும்பகுதி விதை வெங்காயத்தை செய்கை பண்ணி வழங்கும் இப்பகுதி விவசாயிகளுக்கு உரியவாறு உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அபிஷேகப் பொருள்கள்
★ புதுமனை அத்திவாரப் பொருள்கள்
★ நாள் சரக்குகள்
★ விவாக முகூர்த்தப்பொருள்கள்
★ கோவில் சங்காபிஷேகப் பொருள்கள்
★ கும்பாபிஷேகப் பொருள்கள்
★ அஷ்டபந்தன மருந்து

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

21-09-1987 திங்கட்கிழமை



திறம் விளைவுகூடம், பச்சைச்சந்தனம், பைசூர்ச்சந்தனம், No. 1 குங்குமப்பூ.
ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைத் திரவியங்கள் போன்ற சகல பொருள்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்,

க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.


## திருகோணமலையில் ஏற்பட்ட சேதம்

கொழும்பு, செப். 21
கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் ஆரம்பித்த வன்செயல்களில் நான்கு கடைகள், பத்து வீடுகள் சேதமாக்கப்பட்டன

சில வீடுகள் தீக்கிரையாகின. ஒரு மினிபஸ், ஒரு லொறி, பத்து மோட்டார் சைக்கிள்கள், ஒரு சைக்கிள் ஆகியனவும் தீக்கிரையாக்கப்பட்டன.

தமிழ்க் கடைகள், வீடுகள் தீப்பற்றி எரிவதை ஒருவர் வீடியோ படம் எடுத்துக் கொண்டிருந்தார். அச்சமயம் அந்த இடத்துக்கு வந்த பொலிஸார் வீடியோ கமராவை கைப்பற்றினர்.

ஊரடங்குச் சட்ட நேரத்திலும் தமிழர் வீடுகள் சில தாக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இவ் வன்செயல்களில் 4 பேர் உயிரிழந்தனர்; 27 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்றுவரும் திருமலை ஆஸ்பத்திரியை இந்திய அமைதிப்படையினர் காவல் புரிந்து வருகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுல்செய்யப்படுகின்றது.

இந்திய அமைதிப் படையினர் இலங்கைப் பொலீஸாருடன் சேர்ந்து ரோந்து புரிந்து வருகின்றனர்.

திருமலையில் வெள்ளிக்கிழமை நடந்த வன்செயல்களின்போது இந்திய அமைதிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என்று இந்தியத் தூதரகப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

## பொலீஸ் அதிகாரிகளை
### தண்டிக்க ஜே. வி. பி. முடிவு

கொழும்பு, செப். 21
பொலீஸ் நிலையங்களைத் தாக்குதவற்குப் பதில் தென் இலங்கைத் தீவிரவாதம்பற்றி விசாரணைகள் நடத்திவரும் பொலீஸ் அதிகாரிகளைத் தண்டிக்க தடைசெய்யப்பட்ட ஜே.வி.பி இயக்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

பிரதி பொலீஸ் மாஅதிபர் நீல் வீரசிங்காவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் கொழும்பு மாநகர புலனாய்வுப் பிரிவு இப்படித் தெரிவித்துள்ளது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜே. வி. பி. இயக்கத்தினரை விசாரணையின்போது பொலீஸார் சித்திரவதை செய்துவருகின்றனர் என்றும் இதனால் சில கைதிகள் உயிரிழந்துவிட்டனர் என்றும் ஜே. வி. த. குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்த பொலீஸ் அதிகாரிகளை ஜே. வி. பி அடையாளங் கண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது

''அந்த அதிகாரிகளைப் பிடிப்பது, அப்படிப் பிடிக்க முடியாதுபோனால் அவர்களின் குடும்பத்தினருக்குத் துன்பம் விளைவிப்பது —என்று ஜே வி பி யினர் தீர்மானித்துள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது

### ஒப்பந்தம் குறித்து எழுதப்பட்ட
## அனுராவின் புத்தகம் 20ஆயிரம் பிரதிகள் பொலீஸார் வசம்

கொழும்பு, செப் 21
இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி எதிர்க்கட்சித்தலைவர் அனுரா பண்டாரநாயக்கா எழுதிய புத்தகம் ஒன்றை இரகசியப் பொலீஸார் கைப்பற்றினர்.

நுகெகொடையில் உள்ள அச்சகம் ஒன்றை சனிக்கிழமை 3 மணியளவில் முற்றுகையிட்டுப் புத்தகத்தின் 20 ஆயிரம் பிரதிகளையும் பொலீஸார் கைப்பற்றினர்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகலவிடம் திரு அனுரா பண்டாரநாயக்கா முறையிட்டார்.

ஒப்பந்தம் பற்றிஎதிர்க்கட்சித்தலைவர் மக்களுக்கு விளக்கிக் கூற முடியாதா? - இப்படித்தனது முறைப்பாட்டில் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருந்தார்

முறைப்பாடு பற்றி உயர் அதிகாரிகளுடன் பரிசிலனை செய்து வருவதாக ஜெனரல் ஆட்டிகல தெரிவித்தார். (உ-எ)

### 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கான
## புலமைப் பரிசில் பரீட்சை சனிக்கிழமை

பலாலி, செப். 21
யாழ் மாவட்டத்தில் ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் நடத்தப்பட வேண்டிய இப் பரீட்சை இராணுவ நடவடிக்கையின் காரணமாக, யாழ் மாவட்டத்தில் மட்டும் ஒத்திப் போடப்பட்டிருந்தது.

தென்பகுதியில் இத் தேர்வு ஏற்கனவே முடிந்து விட்டதனால், வடபகுதிக்கென விசேடமாக நடாத்தப் படும் இப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் தென்பகுதிப் பிரபல்யமான பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட முடியாத நிலை உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-119)

## விஜயம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் செப். 27
இலங்கைச் சாரணர் அபிவிருத்திபற்றிக் கலந்துரையாடுவதற்கு என இன்று யாழ்ப்பாணம் வரவிருந்த இலங்கைச் சாரணர் சங்கப் பிரதம ஆணையாளர் திரு. றெக்ஸ் ஜெயசிங்க, தேசியப் பயிற்சி ஆணையாளர் திரு. லயனல் சில்வா ஆகியோரது விஜயம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கரடியிடம் சிக்கியவர் மரணமானார்

யாழ்ப்பாணம், செப் 21
கரடியினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் உயிருக்குப்போராடிக்கொண்டிருந்த நெடுங்கேணி சந்தார மோட்டையைச் சேர்ந்த பொன்னையா பாலேந்திரன் நேற்று மரணமானார்

வேட்டைக்குச் சென்றபொழுது கரடிதாக்கியதால் இவர் இரண்டு கண்களையும் இழந்தநிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். (உ-10)

## இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்தை நிறுத்துங்கள்
### புலிகளிடம் இந்திய அதிகாரி நிபந்தனை

குருநகர், செப். 21
★ இந்தியாவுக்கு எதிரான பிரசாரம் செய்வதை நிறுத்துங்கள்.
★ இந்திய—இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராகப் போராடுவதையும் நிறுத்துங்கள்.

அப்பொழுதுதான் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட சரத்துக்கள் நிறைவேற்றப்படும்.

—இப்படி இந்திய அமைதிகாக்கும் படையின் உயரதிகாரி ஒருவர் கடந்த சனிக்கிழமையன்று விடுதலைப் புலிகள் பிரமுகர் யோகியைச் சந்தித்தபோது அவரிடம் கூறினாராம்

இத்தகவலை திரு. யோகியே தெரிவித்தார்.

நேற்று குருநகரில் நடைபெற்ற ஒரு நாள் அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

'இடைக்கால அரசை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தான் அமைக்கும்; அந்த இடைக்கால அரசை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தான் நிர்வகிக்கும்— இவை எமக்குத் தரப்பட்ட உறுதி மொழிகள்.

ஆனால் அது செயற்படுத்தப்படுவதில் தயக்கம் காட்டப்படுகிறது

எமக்கு நிந்தனை விதிக்கும் இந்திய அரசு கிழக்கு, வன்னிப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருவதைக் கண்மூடித்தனமாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

—இவ்வாறு யோகி மேலும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவிலும் மறியற் போர்

யாழ்ப்பாணம், செப் 21
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளசகல அரச அலுவலகங்கள், இந்திய இராணுவ முகாம்கள், ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையம் ஆகியவற்றின் முன்பாக மக்கள் தொடர்ச்சியாக மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கையை வலியுறுத்தியே இந்த மறியல் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இந்திய இராணுவத்தினர் முகாம்களை விட்டு வெளியேற முற்படும் பொழுது பொதுமக்கள் அவர்களின் வாகனங்களுக்கு குறுக்கே படுத்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## முஸ்லிம்களுக்கு கூடுதல் பங்கு

கொழும்பு, செப் 21
இணைந்த மாநில அமைப்பில் முஸ்லிம்களின் இனவிகிதாசாரத்தை விட கூடுதலான பங்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களுடன் முஸ்லிம் தலைவர்கள் நடத்தியபேச்சுக்களின் போது இந்த இணக்கம் காணப்பட்டது.

இத் தகவலை கொழும்பு வந்துள்ள கூட்டணித் தலைவர்கள் திரு. இரா சம்பந்தன், திரு மு சிவசிதம்பரம் ஆகியோர் தெரிவித்தனர். (உ-எ)

## இன்றும் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நடைபெறமாட்டாது எனப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-10)

## திலீபனை வாசு - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவருடன் வந்திருந்தனர்.

நல்லூரில் அறு நாட்களுக்குமேலாக நீராகாரம் எதுவுமின்றி உண்ணாவிரதப்போராட்டம் நடத்தும் திலீபனையும்,ஏனைய உண்ணாவிரதிகளையும், உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ள நல்லூரில் கூடும் ஆயிரக்கணக்கான மக்களையும் அவர் பார்வையிட்டார்.

(உ-10)

## ஈஸ்வரதாஸ் - - -

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. ஈஸ்வரதாஸ் கிரிக்கெட், உதைபந்தாட்டம், ரேபிள் ரெனிஸ் உட்பட பல விளையாட்டுகளில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார்.

திரு ஈஸ்வரதாஸுக்கு வயது 58. இரண்டு பிள்ளைகளின் தந்தை.

சிலவாரங்களாக சுகயீனமுற்றிருந்த அவர் கடந்த சனிக்கிழமை யாழ் ஆஸ்பத்திரியில் காலமானார்

சுன்னாகத்தில் உள்ள இல்லத்திலிருந்து அன்னாரது பூதவுடல் சுன்னாகம் பொது மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக இன்று பகல் பத்து மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

## குடாநாடு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது

### இன்றைய நிகழ்ச்சி

பருத்தித்துறை, கற்கோவளம், கப்பர்மடம், பருத்தித்துறை மருதடி விநாயகர் ஆலயம், அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில், திக்கம் பிள்ளையார் கோவில், வதிரி முருகையன் கோவில், குடத்தனை கரையூர், குடத்தனை பொற்பத்தை வல்வெட்டித்துறைச் சந்தி, உடுப்பிட்டிச் சந்தி, பொலிகண்டி உப்புக்கிணற்றடி பிள்ளையார் கோவிலடி, நொண்டமாணு வயிரவர் கோவிலடி, பொலிகண்டி ஆலடி அண்ணா சிலையடி-சரணவாய், சட்டைவேலி, உடுத்துறை பிள்ளையார் கோவிலடி, கொம்மந்துறை பாரதி சனசமூக நிலையம், கொக்குவில் கிழக்கு காளிகோவிலடி ஆகிய இடங்களில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறும்என அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை பலாலி மக்கள் நேற்று தையிட்டி இந்திய சமாதானப் படை முகாம்வரை ஊர்வலமாகச் சென்று அங்கு மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

(உ-160-69-11-119)

## யாழ். பாடசாலைகளுக்கு புனர்வாழ்வு அமைச்சு ரூ.24 லட்சம் நிதியுதவி

பலாலி, செப். 21
இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளை உடனடியாக இயங்கச் செய்ய புனர்வாழ்வு அமைச்சு 24 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளது.

இப்பணத்தில் 20 லட்சம் ரூபா,முற்றாக பாதிப்படைந்த 20 பாடசாலைகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாப்படி நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்காக வழங்கப்படும்.

உடுப்பிட்டி பெண்கள் உயர்தரக் கல்லூரி, உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி ஆகியவற்றுக்கு தலா 45 ஆயிரம் ரூபாவும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் தற்காலிகக் கட்டடங்களை அமைக்கவும்—

ஏற்கனவேபாடசாலைகளால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளுக்கு நிலம்போடுவதற்கு மேலதிகமாக 50 ஆயிரம் ரூபாவும் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டிருக்கிறது.
(உ-119)

## ரூ.30 லட்சம்
### கல்வி அமைச்சு வழங்குகின்றது

பலாலி, செப்.21
யாழ்ப்பாணப் பாடசாலைகளின் சேதமுற்ற கட்டடங்களை இயங்க வைப்பதற்காக உடனடியாகத் திருத்தி அமைக்க 30 லட்சம் ரூபாவினை கல்வி அமைச்சு விசேடமாக வழங்கியுள்ளது.
(உ-119)

## பொலிஸ்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தற்குத் திட்டமிட்டுள்ளது.

பொலீஸ் நிலையங்களைத் திறப்பதன் மூலம் தமிழ்ப் போராளிகள் குழுக்களிடம் மிகுதிஆயுதங்களைக் கஷ்டமின்றிக் கைப்பற்றலாம் என அரசு நம்புகிறதாம்.

வடக்கு, கிழக்கில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பை மீண்டும் கொண்டுவரவும் அதிக பொலீஸ் நிலையங்கள் தேவை எனவும் கருதப்படுகிறதாம்.

பொலீஸ்நிலையங்களைத் திறப்பதற்கு இந்திய அமைதிப் படை உதவி புரியும் எனத் தெரிய வந்துள்ளது.

வடக்குக் கிழக்கில் பொலீஸ் நிலையங்களைத் திறப்பது தொடர்பாக இந்தியத் தென் மண்டல இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தெபிந்தர்சிங் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைப் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போது பொலீஸ் நிலையங்களைத் திறப்பது சம்பந்தமான விவரங்கள் ஆராயப்பட்டன.
(அ-எ)

## ஈ. என். டி. --

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாகனங்களைச் செல்ல அனுமதிக்குமாறு பலர் குழுமி நின்று கேட்டுக்கொண்டனராயினும் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

இதனால் யாழ்ப்பாணம் இருந்து வந்த வாகனங்கள் பரந்தனுடனும் தெற்கேயிருந்து வந்த வாகனங்கள் இரணைமடுச் சந்தியுடனும் நிறுத்தப்பட்டன.

கிளிநொச்சி கடைகளில் கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டிருந்தன பரந்தன், கிளிநொச்சியில் பெரும் பரபரப்பு நிலவுகிறது.
(உ-76)

## திலீபனின் . . . :

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

வருகிறது.

மூளையின் செயற்பாடு பாதிக்கப் பட்டிருப்பதாகவும், அவர் சாதாரண நிதான நிலையை இழந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இன்று நிலைமை மேலும் மோசமாகலாம் [illegible] கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-10)

## இந்திய ராணுவம் யாக்கரையில் குவிப்பு

வடமராட்சி, செப் 21
இந்திய ராணுவ சிப்பாய்கள் நேற்றும் 30 டிரக் வண்டிகள் மூலம் யாக்கரைக்குவந்து சேர்ந்தனர்.

மேற்படி இராணுவக் குவிப்பினைத் பார்த்து இப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்திருக்கின்றனர். (உ-160)

## பழைய வாகனங்களே கிடைத்தன

யாழ்ப்பாணம் சுகாதாரச் சேவைப் பணிமனைக்கு அரசு இரண்டு பழைய வாகனங்களை வழங்கியுள்ளது.

சுமார் 15 வருடம் பாவிக்கப்பட்ட கார் ஒன்றும் சுமார் 20 வருடம் பாவிக்கப்பட்ட ஜீப் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

## உண்ணாவிரதப் போரில் மற்றொரு பெண்

யாழ்ப்பாணம், செப். 21
விடுதலைப் புலிகள் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று ஒரு பெண்மணியும் இணைந்து கொண்டார்.

நல்லூரில்நடைபெறும் இந்தப் போராட்டத்தில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த திருமதி எஸ். நல்லையா என்பவரேநேற்றைய தினம் கலந்து கொண்ட மூன்றாவது பெண்மணி ஆவார்.

திலீபனுடன் சேர்ந்து ஏற்கனவே இரு பெண்கள் நல்லூரில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்பது தெரிந்ததே.

[உ-10]

## பிரபாவின். . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யும் ஏற்படுத்தின.

### பழியை வேறிடத்தில் சுமத்த முயற்சி

இனப்படுகொலைகளின் பின்னர் பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பழியை வேறிடத்தில் போட புலிகள் இயக்கம் முயற்சிப்பது வருந்தத்தக்கது

சக தமிழர் மீதான படுகொலைகளை நடத்திய விடுதலைப் புலிகள் கவனத்தைத் திருப்ப அஹிம்சைப் போராட்டம் என்று கூறி முயற்சிகளை எடுத்து வருகின்றது.

காந்திஜி தானே உண்ணாவிரதம் இருந்தார்; மற்றவர்களை உண்ணாவிரதம் இருக்க அவர் அழைக்கவில்லை.

ஒரு சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட மகனின் சடலத்தைப் பார்க்க தாய் அனுமதிக்கப்படவில்லை.

இன்னொரு சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆவேசத்துக்குப் பள்ளிக்கூட மாணவர்களும் தப்பவில்லை இரண்டு மாணவர்கள் குரூரமாகக் கொல்லப்பட்டனர்.

### ஒத்துழைக்கவேண்டும்

தமிழரினதும்ஏனையோரினதும் நலன்களுக்காக அர்ப்பணித்துள்ள ஒவ்வொருவரும் இந்திய அமைதிப்படையுடன்ஒத்துழைக்கவேண்டும்.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் திட்டவட்டமாக இலங்கையை பல இன, பல சமூக, பல சமய,பல மொழிகள் பேசும் நாடாக அங்கீகரித்து உள்ளது.

எல்லோரும் சமத்துவமாக, பாதுகாப்பாக, சௌஜன்யமாக வாழவும் வழிவகுத்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் போன்ற ஒப்பந்தம் நல்ல முறையில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

அரசியல்விஷயங்களுக்குத் தீர்வு காணுவதற்கு ஆயுதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தம் கூறுகின்றது இப்படி இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி சொன்னார். என்று இந்திய வானொலி அறிவித்தது. (அ-உ-எ)


ஜீப்ரு ஆதரவில்
உதயன் நடத்தும்
உலக கிண்ண கிரிக்கெட் புதிர்

Reliance CUP 1987

பெயர்: ____________
முகவரி: ____________

இம் முறை உலக கிண்ணத்தை வெல்லப் போகும் நாடு எது? . . . . . .
இம் முறை இரண்டாவது இடம் எந்த நாட்டுக்கு கிடைக்கும்? . . . . . .
போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டங்களை எந்த நாடு எடுக்கும்? . . . . . .
போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் குறைந்த ஓட்டங்களைப் பெறப் போகும் நாடு எது? . . . . . .
இந்தப் போட்டியில் இந்திய வீரர் சிறீகாந்த் சதம் பெறுவாரா? . . . . . .



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி: 21-09-1987.
Printed and Published by New Uthayan Publications Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on September 21, 1987


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org